1200

கண்ணன்

15-2-58
13 ந.பை

1200

OFFICE OF THE REGISTRAR OF ...
17 MAR 1958
MADRAS

செய்திகள்

சென்னையின் புதிய கவர்னர்

சென்னையின் புதிய கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அஸ்ஸாம் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். அந்த ராஜ்யத்தின் முதல் மந்திரியாகப் பல ஆண்டுகள் இருந்தவர். அவர் சென்ற ஜனவரி 24-ஆம் தேதி சென்னைக் கவர்னராகப் பதவி ஏற்றுக்கொண்டார். தமிழ் கற்றுக்கொள்ள ஆவல் இருப்பதாகக் கூறும் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி சென்னை ராஜ்ய மக்களின் நன்மதிப்பைப் பெற்று, விளங்குவார் என்று எதிர்பார்க்கலாம்.

ரேடியோ வாரம்

இந்த மாதம் ஒன்பதாம் தேதி நாடெங்கிலுமுள்ள ரேடியோ நிலையங்களில் ரேடியோ வாரம் துவங்கியது. அப்போது சென்னை, திருச்சி நிலையங்களில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சென்னை ரேடியோ வாரத்தைச் சென்னையின் புதிய கவர்னர் ஆரம்பித்து வைத்தார். சிறுவர் நிகழ்ச்சிகளில் வர வரச் சுவை குறைந்து வருவதைக் கவனித்து, உற்சாகமும் ஊக்கமும் தரும் வகையில் அதை மாற்றியமைக்க முன் வரவேண்டும் என்பதே தமிழ் நாட்டுச் சிறுவர்களின் விருப்பமாகும். புதுத் திறமைகளை அறிமுகப்படுத்தி, புதுமையான பல அம்சங்களைச் சேர்ப்பது குறையைத் தீர்க்க உதவும் ஒரு வழியாகும்.

போலீஸ் நாய்க்கு வீரப் பட்டி

கல்கத்தா கவர்னர் மாளிகையில் நடந்த திருட்டைக் கண்டுபிடிக்க உதவிய போலீஸ் நாயின் பெயர் மிட்டா. இது சென்னையில் பயிற்சி பெற்ற நாய். கல்கத்தா கவர்னர் பத்மஜா நாயுடு அவர்கள் அதன் கழுத்தில் வீரப் பட்டி ஒன்றை அணிவித்தார். தன் நன்றியைத் தெரிவிக்க, கை குலுக்கும் முறையில் மிட்டா தன் முன்னங் கால்களை உயர்த்தியதாம்.

பள்ளி ஆசிரியர் நிலை உயரும்

சென்னை ராஜ்யப் பள்ளி ஆசிரியர்களின் அந்தஸ்தை அபிவிருத்தி செய்யச் சர்க்கார் முயன்று வருகிறதாம். நாட்டின் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் இனிச் சோர்வடைய வேண்டியதில்லை என்று கல்வியமைச்சர் கூறுகிறார்.

சட்டசபையில் தமிழ்

தமிழ் சென்னை ராஜ்ய அரசாங்க மொழியானதைத் தொடர்ந்து, சட்டசபை அலுவல்கள் யாவும் தமிழிலேயே தொடங்கப் பெற்றன. சட்டசபை உத்தரவுகள், அறிக்கைகள் முதலியன தமிழில் [illegible]த்தி[illegible]களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்று[illegible] விவாத[illegible]கள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறுகின்றன.

குழந்தைகளுக்கு விசேஷ மூளை

குழந்தைகள் பள்ளியிலோ அல்லது வீட்டிலோ சாத்தியமான அளவு எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் சுலபமாகக் கற்றுத் தெரிந்து கொண்டுவிடலாம். அதற்கு ஏற்றவாறு இளமையில் அவர்களுடைய மூளை அலாதி விசேஷத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. குழந்தைகள் கற்கும் எதுவும் சிரமமின்றி அப்படியே பதிந்துவிடும் என்று மூளை நிபுணர் ஒருவர் கூறியதாகச் சமீபத்தில் நேருஜி சென்னை விஜயத்தின் போது கூறினார்.

கதைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

மலர் 9 இதழ் 4

15—2—1958

குழந்தைகளே !

கண்ணனில் அடிக்கடி முழு நீளக் கதைகள் வரவேண்டும் என்று பல நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த யோசனையை ஏற்றுக்கொள்கிறேன். அவ்வப்போது அதிகப் பக்கங்களுடன் முழு நீளக் கதைகள் வெளிவரும்.

இந்த இதழில் இடமின்மை காரணமாக வளரும் எழுத்தாளர் அறிமுகம் ஆரம்பமாகவில்லை. அடுத்த இதழிலிருந்து இந்தப் பகுதி தொடங்குகிறது.

அடுத்த இதழ் அதிகப் பக்கங்களுடன் வெளிவரும். முழு நீளக் கதை ஒன்றும் மற்றும் பல அருமையான கதைகளும் அதிலே இடம் பெற்றிருக்கும். புதிய தொடர்கதைகள் இரண்டையும் பாராட்டி எழுதியுள்ள நண்பர்களுக்கெல்லாம் என் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு இருந்ததுபோல் வாசகர்களின் பகுதி இப்போது கண்ணனில் இல்லையே என்று பல அன்பர்கள் அடிக்கடி எழுதிவருகிறார்கள். சுவையான, சுருக்கமான கடிதங்கள் எழுதுங்கள். அவசியம் அவற்றைப் பிரசுரிக்கிறேன் என்பதே என் பதில். பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பாடல்களையும் கதைகளையும் நீங்கள் அனுப்பலாம். கண்ணன் கழகத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள்தான் கண்ணனில் கதை, கட்டுரைகள் எழுதலாம் என்பதில்லை. யார் எழுதியனுப்பினாலும் நன்றாக இருந்தால் நிச்சயம் பிரசுரமாகும். இதில் சந்தேகமே வேண்டாம். உங்களிடமிருந்து நல்ல ஹாஸ்யக் கதைகள், தீரச் செயல் மிகுந்த விறுவிறுப்பான கதைகள் இவற்றையே முக்கியமாக எதிர்பார்க்கிறேன். 'அழுமூஞ்சி'க் கதைகளை அனுப்பாதீர்கள்.

—ஆசிரியர்.

பார்க்க வா!

வட்ட நிலா பார்க்க வா!
வான நிலா பார்க்க வா!
எட்ட எட்ட ஓடுகின்ற
இரவு நிலா பார்க்க வா!
மோக நிலா பார்க்க வா!
முத்து நிலா பார்க்க வா!
மேக மேகக் குதிரை ஏறி
மின்னும் நிலா பார்க்க வா!
அந்தி நிலா பார்க்க வா!
அழகு நிலா பார்க்க வா!
முந்தி முந்தி நீரில் வந்து
மூழ்கும் நிலா பார்க்க வா!

—தமிழ் ஒளி

'ஜரு'

5. கரடு முரடான பாதை

இளம் வீரனும் சிறுவனும் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அந்த உருவம் அங்கேயே தயங்கி நின்றது.

''நல்லவேளை! பூசாரியே இருக்கிறார். உதவி மறுக்காத வர்—அதாவது நல்லவர்களுக்கு!'' என்று கூறியவாறு சிறு வனை அழைத்துக்கொண்டு முன்னால் நடந்தான் வீரன்.

''யாரது?'' என்று பூசாரியின் குரல் அழுத்தமாகக் கேட் டது. கேட்டதோடு நில்லாமல் கை தீவட்டியைப் போய்க் கொளுத்தி வந்து மீண்டும், ''யார் அங்கே?'' என்றார் அவர்.

வீரன் பதில் கூறாமல் வெளிச்சத்தருகே வந்ததைக் கண்ட தும், ''நெடுமாறனா! இன்னும் யார் உன்கூட?'' என்று வினவி னார். நெடுமாறன் பதில் கூற முயன்றதுமே, ''உஸ்! மெது வாகப் பேசு! வேங்கையார் படையினர் எதிரேயுள்ள சாலையில் சற்று முன்பு சென்றதைக் கண்டேன். ஒருகால் அவர்கள் திரும்பி வரக்கூடும்!'' என்று எச்சரித்தார் பூசாரி.

''அவர்கள் எங்களைத்தான் துரத்திச் செல்கிறார்கள்!''

''உங்களையா?''—பூசாரி விளக்குப் பந்தத்தைச் சிறுவன் அருகே பிடித்து அவன் முகத்தைக் கவனித்தார்.

''இது யார்? இது..இந்த முகம்....'' பூசாரி வேறு ஏதோ நினைவு வந்தவராக முகத்தைத் திருப்பி, ''உன்னை வேங்கையார் நேருக்கு நேர் பார்த்தாரா?'' என்று தணிந்த குரலில் நெடுமாறனைப் பார்த்துக் கேட்டார்.

''பார்த்ததுடன் மட்டுமா? பார்த்ததோடு அவரை விட முடியவில்லை; எதிர்க்கவும் வேண்டியதாகிவிட்டது.''

''அப்படியா?''

"ஆமாம்; இல்லையோ என் நெஞ்சிலே வேங்கையாரின் நஞ்சு தோய்ந்த அம்பு பாய்ந்திருக்கும்!" என்று தானாகவே விடையளித்தான் சிறுவன்.

பூசாரியார் அவன் கண்களையே சிறிது நேரம் பார்த்து விட்டு, "உன் பெயர் என்ன?" என்று மட்டும் கேட்டார்.

"இளமாறன்!"

பூசாரியார் உடனே பந்தத்தை ஊதித் தரையிலே தேய்த்து அணைத்துவிட்டு, "நெடுமாறா! இரவு இங்கேயே தங்கிச் செல்லலாமா?" என்று கேட்டார்.

"இல்லை. நான் போக வேண்டும். இந்தத் தம்பி வேண்டுமானால் உங்களோடு இங்கே இருக்கட்டும். பொழுதுவிடிந்து

அவன் தன் இருப்பிடத்துக்குப் போகலாம்!'' என்றான் நெடுமாறன்.

இளமாறனுக்கு இந்த யோசனை சிறிதும் பிடிக்கவில்லை. அவனால் இவ்வளவு தூரம் இகழ்ச்சியும் ஏமாற்றமும் வேங்கையாருக்கு நேர்ந்துவிட்ட பிறகு அவன் முன்போல் இந்தப் பகுதியில் இருக்க முடியுமா? இஷ்டப்படி மானோடு சேர்ந்து காடு மேடெல்லாம் ஓடித் திரிய முடியுமா? அதையெல்லாம் நினைத்தவுடனேயே பயம் வந்து அவனைப் பற்றிச் சூழ்ந்து கொண்டது. என்ன நேர்ந்தாலும் காளி கோயிலிலே பூசாரியோடு தங்கியிருக்க அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை; இதை உடனே மறுத்துக் கூறுவானேன் என்று அவன் அவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

''அப்படியானால் இரு; இதோ வருகிறேன்!'' என்று கூறிவிட்டு, பூசாரி கோயிலின் வடபுறமாக இருளிலே சென்றார். இளமாறன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் இதுதான். அவன் மெதுவாக இளம் வீரனைப் பார்த்து, ''அண்ணா! நானும் உன்னோடு வருகிறேன்!'' என்றான்.

''அது எப்படி முடியும்? உன்னை உன் வீட்டில் யாரும் தேட மாட்டார்களா?''

''என்னைத் தேட யாருமே இல்லை!''

நெடுமாறனுக்கு இந்தப் பதில் வியப்பைத் தந்தது. ''அப்படியானால் அந்தத் தாத்தா எங்கே?'' என்று கேட்டான்.

''மூன்று நாளாக அவரைக் காணவில்லை. எங்கே போனார், எப்போது வருவார் என்று தெரியவும் இல்லை....''

நெடுமாறன் பெருமூச்சு விட்டது மட்டும் சிறுவனுக்குக் கேட்டது. சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு அவன், ''ஆனால் என்னைக் காணாமல் என் மான்தான் தவித்துப் போகும்..'' என்று தொடர்ந்து கூறினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் மாட்டு வண்டி ஒன்று வாசல் திடல் வழியாகச் சாலையை நோக்கி வந்து நின்றது. பூசாரி கையிலிருந்த சாட்டைக் குச்சியை நெடுமாறனிடம் கொடுத்து விட்டுப் பேசாமல் நின்றார். அவருடைய குறிப்பு நெடுமாற னுக்குத் தெரிந்தது. வழியில் ஆபத்து நேரும் என்று அவர் கருதினால் அந்த மாட்டு வண்டியைத்தான் பூட்டி ஓட்டி வருவார். பூசாரியின் வண்டி என்றால் யாரும் அதன் அருகேகூட வர மாட்டார்கள்.

''இந்தத் தம்பியை நான் என் கூடவே அழைத்துக்கொண்டு போகிறேன். இங்கே விட்டு விட்டுப் போக வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டேன். பிறகு வழக்கம்போல் வந்து பார்க் கிறேன்'' என்று கூறினான்.

இளமாறனுடைய மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை.

''தம்பி! வண்டியில் ஏறிப் படுத்துக்கொள்!'' என்று கூறி விட்டுப் பூசாரியிடம் விடைபெற்றுக்கொண்டான் நெடுமாறன்.

வண்டி சாலையை அடையும் வரையில் பூசாரி பின்னாலேயே வந்தார். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, தம் மேலே போட்டிருந்த கம்பள ஆடையை எடுத்து, இளமாறனைப் போர்த்திவிட்டார். ''நன்றாக மூட்டையைப் போலச் சுருட்டி முடங்கிக் கொள்! தலையை வெளியே நீட்டாதே!'' என்றார்.

நெடுமாறன் தலையிலே பெருத்த முண்டாசு ஒன்றைக் கட்டிக்கொண்டு, ''ஹய், ஹய்!'' என்று மாட்டின் வாலை வளைத்து முடுக்கினான்.

சாலையில் வண்டி உருளும் சத்தம் இருளின் அமைதியிலே தனித்துக் கேட்டது. ஆற்றின்மீது சீறிச் சென்ற காற்றின் வேகத்தோடு அந்தச் சத்தம் கலந்து ஒரு பீதியை எழுப்பியது.

வண்டி கூப்பிடு தூரம்கூடப் போயிருக்காது.

''யாரது வண்டியிலே?'' என்று அதிகாரத்தோடு ஓர் ஆள் குதிரைமீது தோன்றி வழியை மறித்தான்.

''யாரது கேட்பது?''

அப்படிக் கேட்ட பிறகுதான் நெடுமாறன் தன் பிழையை உணர்ந்தான். எதிரே வழியை மறித்து நிற்பவன் தனி ஆளாக வரவில்லை. சாலையின் இருளடர்ந்த மர நிழலிலே இன்னும் நாலைந்து குதிரை வீரர்கள் இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வேங்கையாரின் வேளைக்காரப் படையினர்தான் என்பதை விரைவிலே கண்டுகொண்டன அவன் கண்கள்.

கிட்டத்தட்ட வலுவிலே போய்ப் பொறியிலே அகப்பட்டுக் கொண்டுவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. இதற்குத் தானு அவனும் இளமாறனும் உயிரைக்கூட மதியாமல் உருண்டு வரும் ஊழி வெள்ளத்திலே குதித்துப் போராடினுர்கள்? இப் பொழுது தப்பிச் செல்வதற்கு வேறு வழி இருப்பதாகத் தெரிய வில்லே. ஒரு புறம் சீறும் காட்டாறு; மறுபுறம் முட் செடி மண்டிய புதர்க்காடு!

ஆனுல் அதிருஷ்டம் அன்று நெடுமாறன் பங்கில் இருந்தது. குதிரையில் வந்தவன் அவனே அடையாளம் கண்டுகொள்ள வில்லே.

''பூசாரியார் இருக்காரா?''

''இருக்கிருர்..'' நெடுமாறன் குரல் என்ன சொல்வது என்கிற தயக்கத்திஞல் அடியோடு மாறிப் போயிற்று. அதிகார மிடுக்கில் இருந்த வீரனுக்கு அதைக் கண்டுகொள்ள அவகாசம் ஏது?

''சரி; வழியிலே யாராவது இரண்டு இளவட்டங்கள் கண்ணிலே தென்பட்டானுகளா?''

''வழியிலா? இல்லேயே...''

''அப்படியானுல் சரி; ஓட்டு வண்டியை!''

நெடுமாறன் 'அப்பாடா' என்பதுபோல் நெடுமூச்செறிந் தான். கம்பளி ஆடைக்குள்ளே கம்மென்று முடங்கியிருந்த இள மாறனுக்கும் அப்போதுதான் நல்ல மூச்சு வந்தது.

அந்த நெடுஞ்சாலேயின் சுவட்டிலே நேராக ஓடிய வண்டி, குண்டும் குழியும் நிறைந்த காட்டுப் பாதை ஒன்றில் இறங்கி ஓடத் தொடங்கியது. இனி தன்னுடைய வாழ்க்கையும் அந்தப் பாதையைப்போல் கறடு முரடானதாகத்தான் இருக்கும் போலிருக்கிறது என்று மெல்லத் தலேயைத் தூக்கிப் பார்த்தான் இளமாறன்.

ஒரே இருட்டு!

* * * *

பொல பொலவென்று பொழுது விடியும் சமயத்தில் தான் இளமாறன் கண் விழித்தான். சட்டென்று அவ னுக்கு எங்கிருக்கிருேம் என்கிற நினேவு வரவில்லே. ஆனுல் மெல்ல எழுந்திருக்க முயன்றபோது அவன் தலே வண்டிக் கூண்டில் இடித்துகொண்டதும்தான் அவனுக்கு முதல்நாள் இரவு நடந்ததெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. அவனுக்குப் பக்கத்திலே வண்டியை ஓட்டிவந்த நெடுமாறன் படுத்துக் கண்ணுறங்கிக்கொண் டிருந்தான். ஆயினும் வண்டி சுவடு மாருமல் சோர்வின்றிப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டு இளமாறன் அதிசயித்தான்.

இரவு முழுவதும் மாடு வண்டியை இழுத்துக்கொண்டு வந்திருப்பது தெளிவாகத் தெரிந்தது. ஆயினும் கடமையைச் செய்யும் வீரனைப்போல, அது யாருடைய தூண்டுதலும் இன்றி, செல்லும் பாதையை உணர்ந்து பிரயாணம் செய்திருக்கிறது. அதன் கடைவாயில் இரவெல்லாம் ஓடிவந்த களைப்பினால் நுரை பொங்கிக்கொண் டிருந்ததைக் கண்டு இளமாறன் நெஞ்சம் கரைந்தது. மாட்டின் தலைக்கயிற்றை நெடுமாறன் வெறுமே கூண்டிலே இணைத்திருந்தான். அதை அவிழ்த்துக்கொண்டு, இளமாறன் மாட்டின் முதுகிலே தட்டிக்கொடுத்தான். அவனுக்குத் தன் மானுடைய நினைவு வந்துவிட்டது. அவனைக் காணாமல் அது காட்டிலே எங்கெல்லாம் சுற்றித் திரியுமோ என் பதை எண்ணியபோது அவன் உள்ளம் கலங்கியது. அதை விட்டு விட்டு வந்ததே தவறு என்றுகூடத் தோன்றியது.

ஆனால் வண்டிப் பாதையைச் சுற்றித் தென்பட்ட இயற் கைக் காட்சிகள் அவன் மனத்தைக் கவர்ந்தன. வண்டி இப் போது சென்ற இடம் அடர்ந்த காட்டுப் பாதையாக இல்லை. ஆங்காங்கே குன்றுகளும் ஏரிகளும் தெரிந்தன. சாலை சுற்றி வளைந்து ஏறிச் செல்வது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. சாலையை ஒட்டியிருந்த மாமரங்களில் பெரும் காய்கள் கொத் துக் கொத்தாகக் குலுங்கின. அதைப் பார்க்கும்போதே இளமாறன் நாவிலே உமிழ்நீர் ஊறியது. ஈச்சை மரங்களில் மஞ்சள் மசேரென்று குலையாக குலையாகத் தொங்கின. ஈச்சம் பழம் என்றால் இளமாறனுக்கு உயிர். அவன் வசிக்கும் பகுதி களில் ஈச்சை மரங்களைக் காண்பது அரிது. ஆனால் இந்த இடத்தில் அவை ஏராளமாகக் காணப்பட்டதுடன் கைக்கு எட்டு கிற உயரத்திலும் குலைகள் தொங்கின. இதையெல்லாம் பார்த்த அவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.

வண்டி குன்றுபோல் உயர்ந்த மேட்டில் ஏறியதும் நீண்ட இறக்கம் வெகுதூரம் வரையில் தெரிந்தது. கிட்டத்தட்ட இரண்டு கல் தொலைவில் ஒரு குன்றும் அதை அடுத்து ஒரு குடிசையும் கண்ணுக்குத் தெரிந்தன. பார்த்துக்கொண் டிருந்த போதே அந்தக் குன்றின் உச்சியில் புள்ளிபோல் ஓர் உருவம் நிற்பது தெரிந்தது.

வண்டி இறக்கத்தில் ஓடத் தொடங்கியதும் அந்த உருவமும் குன்றிலிருந்து இறங்கிக்கொண் டிருப்பதைக் கண்டான் இள மாறன்.

கதிரவன் ஒளியிலே கண் கூசத் தொடங்கியதால் அப்புறம் ஒன்றும் புலப்படவில்லை. குடிசை நெருங்கும் சமயத்தில்தான் நெடுமாறன் விழித்துக்கொண்டான். ஆனால் சாலையின் வளைவிலே யாரோ கூச்சலிட்டுக்கொண்டு ஓடி வருவது கேட் டது. இருவரும் அதைக் கேட்டுத் திகைத்து நின்றார்கள்.

(தொடரும்)

நயாபைசா மாமா

சி. டி. எம். பானு

''உங்கள் பிச்சைக் காசும் எனக்கு வேண்டாம். நானும் உங்கள் கைக்கூலியாள் அல்ல.''

கோபமாயும் உறுதியுடனும் சொல்லிவிட்டு வெளியேறினான். அக்கா கெஞ்சினாள். மாமா மிரட்டியதோடு ஓர் அறையும் கொடுத்தார். எதையுமே பொருட்படுத்தாது வீர கர்ஜனையுடன்தான் வெளியே வந்தான் கிட்டு.

''மாமா அப்படியா சொன்னார்? இதோ பார்! உன் சின்னமாமா வந்ததும் நான் எவ்வளவு காசு வாங்கித் தர்றேன் பார்; என் வீட்டுக்காரர் படித்தவர்; பணக்காரர்! வெங்கிட்டு மாமா மாதிரி கருமி இல்லை. அவர் மனம் கோணாமல் நீ உதவி செய்தால் வாரி வாரி வழங்குவார்.''

சூட்டோடு சூடாகக் கூடத்து ஊஞ்சலில் பத்திரிகையுடன் இருந்த சின்ன அக்கா சொன்னாள். கிட்டுவின் சின்ன அக்காவுக்கு இன்னும் ஒரே வாரத்தில் கல்யாணம் நடக்க போகிறது.

* * *

''பாலு, கோபு, மணி, ஓடி வாங்கடோய்!''

ஏதோ காரமான விஷயமில்லாமல் கிட்டு அண்ணா இப்படிக் கூப்பிட மாட்டான் என்பது தெரியுமாதலால் மூவரும் முண்டி அடித்துக்கொண்டு ஓடினார்கள்.

''தம்பிகளே, இனி மாமா நமக்கு ஒரு நயாபைசாகூட தர மாட்டாராம். அவருக்கு நம் உதவி தேவை இல்லையாம்.''

''இது அநியாயம், அக்கிரமம். வழக்கமாக வரும் நம் வருமானத்தையும் இழப்பதா? அவமானம்! உடனே இதற்கு ஏதாவது முடிவு செய், அண்ணா!'' வாழைப்பழத்தை விழுங்கியபடி பாலு கத்தினான்.

''நல்ல முடிவு செய்துவிட்டேன் பாலு. அதை உங்களிடம் சொல்லி மெஜாரிட்டியாக்கவே இங்கே நம் மகாநாடு கூடுகிறது. எல்லோரும் அமருங்கள். சுதந்தரமாகத் திரியும் யானையைப் பார்த்துப் பாகனுக்குப் பொறாமையும் ஆசையும் உண்டாகும். பெரிய பள்ளம் வெட்டி அந்தப் பள்ளம் தெரியாதபடி செடிகொடிகளால்மூடிவைத்துவிடுவான். பிறகு யானை பள்ளத்தில் தவறி விழுந்ததும் அதைப் பாகன் சிறிது சிறிதாகத் தன் வசப்படுத்திக்கொள்வான். அதுபோல் சுதந்தரமாக இருந்த நம்மை வஞ்சகமாக நம் மாமா வலை வீசி இதுவரை காசுகளைக் காட்டி, தன் காரியங்களை முடித்துக் கொண்டார். இப்போது நம்மை

உதறித் தள்ளுகிருர். இனி இவர்கள் தயவு தேவையில்லே. நமது சின்ன மாமாவாவது குறிப்பறிந்து நடக்க வேண்டாமா?

''அகத்தது ஐயப்படா அது உணர்வானே; தெய்வத்தோடு ஒப்ப கொளல்'' என நேற்றுப் பள்ளியில் படித்த திருக்குறளுக்கு ஒப்ப நம் மனக் குறிப்பறிந்து நடப்பவரையே நாம் தெய்வமாக மதித்து அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டுமே அல்லாமல் இப்படி சிடுமூஞ்சி மாமாவின் நட்பு நமக்குத் தேவை இல்லே.''

''இன்று முதல் சிடுமூஞ்சி வெங்கிட்டு மாமா தொடர்பே வேண்டாம்.'' ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

''சகோதரர்களே! இதோ நாம் கையாளவேண்டிய பட்ஜெட்! இதை வாசிக்கிறேன், கேளுங்கள். நமது சங்கத்துக்கு மைத்துனர்கள் சங்கம் என்று பெயர். இதற்கு அங்கத்தினர் கட்டணம் ஏதும் இல்லாததால் நேரிலேயே மனுச் செய்து கொள்ள வேண்டியது. குறைந்தது இரண்டு அங்கத்தினர்களாவது இருக்க வேண்டும். நமக்கு எதிர்க் கட்சியாக மாமாக்கள் ஒன்று சேர்ந்து மாமாக்கள் சங்கம் ஏற்படுத்திஞலும் கவலேப்படாதீர்கள், தோழர்களே! ஆனல் நம் சங்கம் மட்டும் மாமாக்களின் தாசர்களாக மாருமல் எதிர்ப்பு அணியாகக் கூட்டு முறையில் இயங்கவேண்டும். நம் துணைக்கு எதிர்வீட்டு ஏகாம்பரம், அடுத்த வீட்டு அம்பி, கோடிவீட்டுக் கோதண்டம் முதலிய மழலேப் பேச்சாளர்களேயும் சேர்த்துக் கொள்வோம். அவசியமானல் வீட்டுக்கு வீடு நம் கிளேச்சங்கம் ஏற்படுத்துவோம்.''

''இந்தச் சங்கத்துக்குத் தலேவர் யார், அண்ணு?'' மூன்று தம்பிகளும் அக்கறையோடு கேட்டார்கள்.

''மாமாவுடன் எதிர்நின்று வாதாடும் திறமையில் என்னேவிட தைரியசாலி யாரும் இல்லாததால் நீங்களாகச் சுமத்தும் தலேவர் பொறுப்பைச் சுமக்கவேண்டியவஞயிருக்கிறேன். தலேவருக்குக் கிடைக்கும் ஆதாயத்தில் உங்களுக்கும் பங்கு உண்டு. ஆகையால் கவலே வேண்டாம். உங்களுக்கும் பதவிகள் தரப்படும்.''

''மாமாவுக்குக் குட்டுக் கொடுக்கும் குட்டி மச்சான்கள் சங்கத் தலேவர் கிட்டு வாழ்க!'' மணியைப் பின்தொடர்ந்து எல்லோரும் கோஷமிட்டுக் கைதட்டி தலேவரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திஞர்கள். தலேவர் கிட்டு அவர்கள் மேலும் பட்ஜட்டை வாசிக்கிருர்:

முதல் திட்டம்

நம் நலனுக்காகச் செலவிடும் பணம் வீண் செலவே என்றும், உதவாக்கறைகள் என்றும் பேசி, நமது சங்கத்தை அவமதித்து உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தர மறுக்கும் சிடுமூஞ்சி மாமாக்களுக்கு சங்கத்தின் சார்பில் கீழ்க்கண்ட பிட்நோட்டீஸ்கள் அனுப்பப்படும்.

'மண்ணேக் கவ்வப்போகும் மாமாவே,

உமது மூக்கு உடையப் போகும் காலம் வந்து விட்டது. கடையாணி உருவத்தில் சிறியதாக இருந்தாலும் பெரிய தேரின் பளுவைத் தாங்கி அதைச் செலுத்தும் பலம் உடையதாகும். அதுபோல நாங்கள் உருவத்தில் சிறியவராய் இருந்தாலும் பெரிய செயல்களேக் கொண்டு உம்மைச் செலுத்துகிற திறமை, பலம், எங்களிடம் உள்ளது. ஆகவே உருவின் சிறுமையைக் கண்டு இகழாதிருப்பீராஞல் உமக்குச் சுகம். இல்லாவிட்டால் எங்கள் கிடுகிடுப் போராட்டங்கள் உம்மைக் கதி கலங்கச் செய்யும். ஆகவே இனியாவது குறிப்பறிந்து நடக்கப் பழகுங்கள்.

இப்படிக்கு
மை. ச. தலேவர் கிட்டு.'

பின் குறிப்பு: மாமா மனஸ்தாபமாக நடப்பாராஞல் ஒவ்வொரு வீட்டு நமது சங்க அங்கத்தினரும் இந்த பிட்நோட்டீஸில் கையொப்பமிட்டு அவர்கள் மாமாக்களிடம் சேர்ப்பிக்க வேண்டியது. இதைக் கண்டதும் மாமாக்கள் பயந்து நம்மைப் போற்றி ஆதரிப்பது நிச்சயம்.

இரண்டாவது திட்டம்

நம் சங்க பிட்நோட்டீஸைக் கண்டும் மாமா மனம் திருந்தி மன்னிப்புக் கேட்கவில்லையானல் இந்த இரண்டாவது திட்டம் அமலாகும். இது மாமாவை முற்றிலும் ஒதுக்கி விடுவதாகும். வரப் போகும் தன் கணவரைப் பற்றிச் சின்ன அக்கா தம்பட்டமடிப்பதால் ஒவ்வொரு வீட்டுத் தம்பி தங்கைகளாகிய நம் அங்கத்தினர்கள் தங்கள் சின்ன அக்காவுக்கும் வரப் போகும் மாமாவுக்கும் (வந்தபிறகு தான்) கீழ்க்கண்ட நமது அறிக்கையை அனுப்பவேண்டும்.

''சின்ன அக்கா, மாமா அவர்களுக்கு வணக்கம். இந்த அறிக்கை முழுவதும் படித்து அதற்குச் சாதகமாக நடக்கவேண்டுகிறோம். நாங்கள் எங்கள் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் கீழ்க்கண்ட சேவைகளைச் செய்யக் காத்திருக்கிறோம்.

1. அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான சில்லறைப் பொருள்களைச் சிரமத்தைப் பாராது எடுத்துவந்து தருவது.

2. காபி, டீ, இட்லி, வடை முதலியவற்றை ரகசியமாக வாங்கி யாருக்கும் தெரியாமல் நேரே மாமாவிடம் சேர்ப்பது.

3. எங்களால் ஏதும் இடையூறு இல்லாமல் உங்கள் சுதந்தரத்துக்குக் காவலாக இருப்பது.

4. ஆபீஸுக்குப் போவதற்கான போக்குவரத்துச் சாதனமான வாகனங்களை அழைத்து வருவது. ரிக்ஷா, சைக்கிள், குதிரைவண்டி முதலியன.

5. உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல் ஓடி ஐஸ்ப்ரூட்டும், உயர்ந்த மூக்குப் பொடியும் வாங்கி வருவது.

6. மொத்தத்தில் மாமா சொல்வதற்கு 'ஆமாம்' என நடப்பதுடன், திருட மாட்டோம், பொய் சொல்லமாட்டோம்.

ஆனல் எங்கள் உரிமை பாதுகாக்கப்படாவிட்டால்:—

1. நாங்கள் உண்மையிலேயே மிகவும் கோபக்காரர்கள்.

2. முன் அறிவிப்புடன் எல்லாச் சலுகைகளும் வேலைகளும் ஸ்ட்ரைக் செய்யப்படும்.

3. தம்பதிகள் இன்பமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் குறுக்கும் நெடுக்குமாக நடப்பது, ஒட்டுக் கேட்பது, அதை அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்வது ஆகிய முறையில் எமது பழியைத் தீர்ப்போம்.

யாராவது தேடிவந்தால் மாமா உள்ளேதான் அக்காவுடன் கொஞ்சிக்கொண் டிருக்கிறார். உங்களிடம் வீட்டில் இல்லை என்று

சொல்லச் சொன்னுர் என்று கூசாமல் பச்சையாகச் சொல்வோம். எங்களை விட்டுவிட்டு நீங்கள் சினிமாவுக்குப் போனலும் இதே கதிதான். கடை வீதிக்குப் போவதாக மாட்னிக்கு நீங்கள் போக முடியாது. குட்டு வெளியாகிவிடும். உஷார்!

5. கோட்டு, ஷர்ட்டு முதலியன கொண்டுவந்து தருவதுபோல அதன் பாக்கட்டுகளில் இருக்கும் சில்லறையை மாயமாய் எங்கள் கைக்கு மாற்றிவிடுவோம்.

6. எங்கள் மீது நீங்கள் மிகக் கடுமையாக இருப்பீரானல் ஆபீஸில் இருந்து வரும்போது எங்கள் சங்கமெம்பர்கள் படையுடன் மலைப்பிஞ்சுகள் கொண்டு பதுங்கியிருந்து உங்களைக் கடுமையாகத் தாக்குவோம். இந்த நிலை கண்டு பலர் சிரிப்பார்கள். இந்த நிலை வருமுன் மாமாக்கள் திருந்துவார்களாக! ஆளொன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து நயாபைசாவாவது தரச் சம்மதிக்கச் செய்யும் வரை போராட்டம் ஓயாது.''

கோபு, மணி, பாலு அனைவரும் பலமாகக் கைதட்டினர்கள்.

''அப்படியே செய், கிட்டு. நமது சின்ன மாமா வந்ததும் நீயே அறிக்கையைக் கொடு. அவர் பணக்காரர். கட்டாயம் பயந்து பணத்தைக் கொட்டுவார்.''

''அத்துடன் நாம் வெங்கிட்டு மாமாவை ஒதுக்கி, திணரடித்து, சாதித்த போராட்டக் குறிப்புகளும் வரப்போகும் சின்னமாமாவுக்கு எழுதித் தரவேண்டும்.''

பாலு வெங்கிட்டு மாமாவின் பேனு முள்ளைக் கடித்தபடியே சொன்னுன். 'பாவம், மாமாவின் பேனுவின் கதி!' போராட்டத்தின் முதல் பலி. சின்ன அக்காவுக்குக் கல்யாணமானதும் அறிக்கையைத் தருவதென்றும் வெங்கிட்டு மாமாவுக்கு பிட்நோட்டீஸ் அனுப்புவதென்றும் மைத்துனர் சபையில் தீர்மானிக்கப்பட்டு, கூட்டம் கலைந்தது.

* * *

சின்ன அக்கா சுந்தரிக்குக் கல்யாணமும் ஆகிவிட்டது. சின்ன மாமாவும் வந்துவிட்டார். கிட்டுவும் தயங்கித் தயங்கி, கடைசியில் தைரியமாக அறிக்கையைக் கொடுத்து விட்டான் புது மாமாவிடம். ஆனல் மறுநாளே மாமாவிடமிருந்து திடுக்கிடும் எதிர்பாராத பதில் வந்தது.

''அன்புள்ள மை. ச. தலைவர் கிட்டுவுக்கு,

உங்கள் அறிக்கையைக் கண்டோம். உங்களால் எங்களுக்கு எந்தவித உதவியும் தேவை இல்லை. ஏனெனில் இன்னும் சில தினங்களில் நாங்கள் திருச்சிக்குப் போய் விடுவோம். மாமனர் வீட்டிலேயே அடைந்து கிடக்க நான் மண்டு அல்ல. நான் இருக்கும்வரை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு உங்கள் அறிக்கையைக் காட்டிலும் இருமடங்காகப் பத்து நாயாபைசா அன்பளிப்பாகத் தருகிறேன், உங்கள் சங்கத்தின் வாலைக் கொஞ்சம் சுருட்டிக்கொண்டு நல்ல பிள்ளையாக இருக்கச் சம்மதித்தால்.

இப்படிக்கு,
சின்ன மாமா.''

அது மட்டுமா? 'பணக்காரர் வாரி வழங்குவார்' என்று பெருமையாகச் சொன்ன சின்ன அக்கா, ''அவரிடம் காசு கேட்டுத் தொந்தரவு செய்யாதீர்கள், பீடைகளே! உங்கள் தொந்தரவு கூடாது என்றுதான் நாங்கள் திருச்சி போகிறேமாக்கும்'' என்று கத்தினுள். திட்டம் இரண்டு பேர்களிடமும் நிறைவேருமல் தோல்வியுடன் திரும்பினுன் கிட்டு.

அவன் அவமானம் தாளாமல் ஓடினுன். தன் சகாக்களைக் கூட்டி, சங்கத்தைக் கலைத்தது மட்டுமல்லாமல் பழையபடி பெரியக்காவின் புருஷர் வெங்கிட்டு மாமாகாலில் போய் நால்வரும் விழுந்தார்கள். ''நீங்கள்தான் நல்ல மாமா. உங்கள் ஏவலை மறுத்த எங்களை மன்னியுங்கள். இனித் தாங்கள் என்ன சொன்னுலும் தட்டமாட்டோம்'' என்று அழுதார்கள். இப்போது பழைய வெங்கிட்டு மாமாவே நயாமாமாவாகிவிட்டார். நயா மாமா வாழ்க!

‘பூமராங்’



ஆர்.பி.மல்லாரி



“உராங் உடாங்!”

‘உராங் உடாங்’ என்று குரங்கு வகையில் ஒரு ஜாதிக் குரங்கு உண்டு. அதுபோல, ‘பூமராங்’கும் குரங்கினம் என்று எண்ணிவிடாதீர்கள்! இது ஓர் ஆயுதத்தின் பெயர்! இந்த ஆயுதத்தை, எதிரிகளைத் தாக்க மாத்திரம் உபயோகப்படுத்த வேண்டுமென்றில்லை; விளையாட்டுக்கும் பொழுதுபோக்குக்கும்கூட உபயோகப்படுத்தலாம்.

உலகில் மிகப் பழைய ஆயுதங்களில் ‘பூமராங்’ ஒன்று. இப்போதுதானே, ஆஸ்திரேலியாவில், பழங்குடி மக்களிடையே இந்த ஆயுதம் பெரும்பாலும் உபயோகப்பட்டு வருகிறது என்று ஒரு சிலர் நினைக்கலாம். பழங்கால எகிப்திய நாட்டில் இது உபயோகத்திலிருந்து வந்தது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் கங்காரு எப்படி அந்தக் கண்டத்துக்குத் தனிப் பிரசித்தியை உண்டாக்கித் தருகிறதோ, அதுபோலவே இந்தப் பூமராங்கும்! இந்தப் பெயரைச் சொன்னால் சட்டென்று ஆஸ்திரேலியாவின் பெயர்தான் ஞாபகத்துக்கு வரும்!

நான்கு ஆண்டுகளுக்கு முன், எலிஸபெத் மகாராணி ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, **ஜோ டிம்பெரி** என்ற பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒரு வல்லுநர், இந்த ஆயுதத்தை மிகவும் சாமர்த்தியமாக உபயோகித்து அரச தம்பதிகளை மகிழ்வித்ததைத் தினசரி ஏடுகள் எடுத்துரைத்தன. டிம்பெரி விட்டெறிந்த பூமராங் நெஞ்சுயரத்தில் நாற்பது கெஜம் ‘விர்’ரென்று சென்று, பிறகு திடீரென்று நூறு அடி உயரத்துக்கு மேலே தாவி, வட்டமாகச் சுற்றிச் சுற்றி, கடைசியில் விட்டெறிந்த ஆசாமியிடமே திரும்பிவந்தது!

இந்த ‘பூமராங் விட்டெறியும் கலை’யில் பல பிரமிக்கத்தக்க போட்டிகள், ஆஸ்திரேலியாவில் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நூற்றி ஐம்பது அடி உயரம் சென்று, விட்டெறிந்தவரிடம் திரும்பிவரும்! கழுகுபோல ஒரே உயரத்தில் சென்று, பிறகு திடீரென்று திரும்பும்!! இப்படிப் பலப்பல!!! அதிக தூரம் செல்லும் போட்டிகளில், பழங்குடி மக்கள் நூற்றிமுப்பது, நூற்றிநாற்பது

கெஜம் தூரத்திலுள்ள மரங்களை நோக்கி இந்தப் பூமராங்குகளை விட்டெறிவார்கள். இப்படிவீசும் போது அவை சுமார் ஐம்பது மைல் வேகத்தில்கூடப் போகும். அவை போகும் வேகத்தில் அவைகளைப் பார்த்தால் மரத்தால் செய்யப்பட்ட உருண்டைத் தட்டுகள் போலத் தென்படும். இருபதடி உயரத்தில் அவை சென்று மரத்தைச் சுற்றிக்கொண்டு, ராக்ஷஸ வேகத்தில், விட்டெறிந்தவர் காலடி நோக்கித் திரும்பிவரும். திரும்பிவந்து விழும் ஜோரில் தரையில் ஓர் அடி ஆழத்தில்கூட அவைகள் பதிந்துவிடுகின்றன!

பூமராங் சுமார் ஒன்றரை அடியிலிருந்து மூன்றடிவரை நீளமுள்ளது. நேர்க்குச்சியாக இருக்காது. இரண்டு பாகங்களாகப் பிரிந்திருக்கும். ஒரு பாகம் சற்று நீளமாகவும், மற்றொரு பாகம் சற்று நீளக் குறைவாகவும் இருந்தாலும், எடையில் அவை இரண்டும் ஒன்றாகவே இருக்கும். இந்த இரண்டு பாகங்களுக்கு மிடையிலுள்ள கோணம் தொண்ணூறு டிகிரியிலிருந்து நூற்றிருபது டிகிரிவரை இருக்கலாம். இதன் ஒரு பக்கம் சப்பையாகவும், மற்றொரு பக்கம் உருண்டையாகவும் இருக்கும். விமானத்தின் புரொபெல்லரில் இருப்பதுபோல, இந்த இரண்டு பாகங்களிலும் 'ஸ்கியூ' உண்டு. இதனால்தான் பூமராங் ஆகாசத்தில் உயரக் கிளம்பிப் போக முடிகிறது. நேராக உயரே இது வீசப்படுவதாலும், முன்னோக்கிச் செல்லும் வேகம் இதை முன்னே இழுப்பதாலும், இது வளைந்த பாதையாகச் சென்று, மறுபடியும் விட்டெறிந்தவனிடமே திரும்பி வந்துவிடுகிறது! இதைச் சரியாகச் செய்ய அநுபவமே தேவை!

பழங்கால மக்கள், விமானத்தின் 'சிறகு'களில் தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நுட்பத்தை எப்படி அறிந்தார்கள் என்பது வியப்புக்குரியதே! ஆனால், ''வேட்டையாடும் பூமராங்'' கிலிருந்து இவை முன்னேற்றமடைந்து இந்த உருவம் பெற்றிருக்கலாம்!

வேட்டை பூமராங் இன்னும் சற்று நீளமுள்ளதாகவும் கனமுள்ளதாகவும் இருக்கும். இரண்டு பக்கமும் தட்டையாகக் காணப்படும். இதை உயரப்போகும்படி விட்டெறியலாமே ஒழிய, இவை திரும்பிவராது. தண்ணீர்ப் பரப்பிலிருக்கும் மீனை நோக்கியோ, தரையில் மேயும் கங்காருவை நோக்கியோ இதை விட்டெறிந்தால், இதன் இரண்டு பகுதிகளும் சுழன்று கொடுக்க, வேட்டையாடப்படவேண்டிய ஜந்துவை நோக்கி இது மிகவும் வேகமாகச் சுழன்று போகும். சுமார் 250 கெஜம் தூரம் வரையில் சென்று, மூன்று கங்காருகளைக்கூடத் தாக்கி விடும். 'சண்டை பூமராங்' என்று இன்னொரு வகையுமுண்டு. சுமார் ஐந்தடி நீளமிருக்கும். இரண்டு கைகளாலும் வீசி எறிந்தால், தலை, கை, கால் என்று பார்க்காமல் எலும்புகளை எல்லாம் முறித்துவிடும்!

திரும்பிவரும் பூமராங்கை வீசப் பழகுவது மிகவும் சிரமமானது. மிகவும் புத்திசாதுரியம் வேண்டும். ஒரு நல்ல பாடகர் அந்த ஸ்தானத்தை அடைய எவ்வளவு சிரமப்பட்டு உழைக்க வேண்டுமோ, அதைவிட அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.

பழங்குடிமக்கள் தங்களுடைய சிறுவர்களுக்கு இந்த வித்தையை மிகவும் கரிசனமாகவும் அக்கறையுடனும் சொல்லிக்கொடுக்கிறார்கள். பாலகன் நடக்க ஆரம்பித்த கையோடு இந்தப் பாடமும் ஆரம்பமாகி விடுகிறது! தந்தை ஒரு விளையாட்டுப் பூமராங் செய்து சிறுவன் கையில் கொடுத்து பழக்க ஆரம்பித்துவிடுகிறான்.

சிறுவனுக்கு இதில் சற்றுப் பழக்கம் ஏற்பட்டதும், மற்றச் சிறுவர்களோடு பூமராங் விளையாட்டு விளையாட ஆரம்பித்துவிடுவான். அதை விட்டெறிவது, மற்றவர் விட்டெறிவதிலிருந்து தப்புவது, அதைத் தடைசெய்து நிறுத்துவது போன்ற விஷயங்கள் அவனுக்குக் கரதலப் பாடமாகிவிடுகிறது. இவையெல்லாம் எத்தனை வயதுக்குள்? எட்டே எட்டு ஆண்டு

நிறைய முன்பு! எட்டு வயதுப் பாலகன் தன் பூமராங்கை விட்டெறிந்து முப்பது கெஜ தூரத்திலுள்ள குருவியை அடித்துப்போடுவது சகஜம்!

அவன் பெரியவனாகும் வரையில் உண்மையான பூமராங்கை அவனிடம் கொடுப்பதில்லை. இந்தக் கலையில் சிறந்த ஒரு வயோதிகனின் மேற்பார்வையில், அதற்குரிய மரத்திலிருந்து சற்று வளைந்த கிளையை எடுத்து, தன்னிடமுள்ள கல் கோடாலியால் செதுக்கி சரி செய்கிறான். பிறகு நெருப்பின் மேல் காட்டி, அதை வாட்டி, தான் விரும்பும் வகையில் வளைத்துக்கொள்ளுகிறான். இதைச் செய்து முடிக்க அவனுக்குப் பல வாரங்களாகும். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டு ஆஸ்திரேலியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் புகுந்துவிட்ட பிறகு, அவர்களிடம் இப்போது சுத்தமான இரும்புப் பூமராங் இருக்கிறது!

பிறகு இந்தப் பூமராங் பறவைகளை வேட்டையாடப் பயன்படுத்தப்படுகிறது. பறந்தோடும் பறவைக் கூட்டத்தோடு இதுவும் பறந்து சென்று பல பறவைகளை ஒரே தடவையில் வீழ்த்திவிடுகிறது! வலை விரிக்கப்பட்டிருக்கும் இடந்தேடி அவைகளை விரட்டி, அவைகளை அந்த வலையில் சிக்கச் செய்யும் ஆற்றலும் பூமராங்குக்கு உண்டு!

பழங்குடிமக்கள் பழகி வந்த இந்த நுண்ணிய கலையை ஆஸ்திரேலியாவிலுள்ள மற்றவர்களும் இப்போது ஆர்வத்தோடு பழகி வருகிறார்கள். டான்னெல்லன் என்பவர் இப்போது நாகரிகமான பூமராங் எல்லாம் செய்துவருகிறார். சமீபத்தில் அவரால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் பூமராங், ஒரு முன்னோடி. இன்னும் சில மாதங்களில் ஆயிரக் கணக்கில் அவைகளைச் சுலபமாகச் செய்துவிடலாம் என்பதையே இந்த பிளாஸ்டிக் பூமராங் உலகுக்கு எடுத்துரைக்கிறது.

பூமராங் விட்டெறியும் அரிய திறமை உலகெங்கும் பரவி எல்லாரும் இதை ஒரு கலை நுட்பம் கலந்த விளையாட்டாக விளையாட வேண்டும் என்பதே டான்னெல்லனின் ஆசை. அதற்காக அவர் பல பள்ளிகளுக்குச் சென்று இந்தப் பூமராங்கைப்பற்றி எடுத்துரைத்து, அவைகளை உபயோகிக்கும் விதத்தையும் விவரித்து, பூமராங்கையும் இனாமாகக் கொடுத்து வருகிறார். ஒரு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர், 'தம் பள்ளியில் பல விளையாட்டுகள் உண்டென்றும், இந்தப் புது விளையாட்டுத் தேவை இல்லையென்றும்' சொல்லி வைத்தார். டான்னெல்லன் எதற்கும் இருக்கட்டுமென ஒரு சில பூமராங்குகளை அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்!

சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பள்ளிக்கூடத்துக்குத் திரும்பிவந்து பார்த்தபொழுது, ஜன்னலெல்லாம் உடைந்திருப்பதைக் கண்டார். ஜன்னல் கதவுகளை எல்லாம் விளையாட்டாக உடைத்தவர் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர்தான்! பூமராங் கொண்டு!! விரும்பாதவர்களையும் இப்படி ஆகர்ஷிக்கும் அரிய திறன் படைத்தது இந்தப் பூமராங்!!!



''நீ போடா, பத்துக்கு ஆறு தானே? என்னைப் பாரு நூத்துக்கு அறுபது வாங்கியிருக்கேன்!''

பொழுது போக்கு



இருபது சாக்லெட் கொண்ட கட்டி. இதை ஒன்பது பாகங்களாக வெட்டவேண்டும். ஒவ்வொரு பாகமும் சம சதுரமாக இருக்க வேண்டும்.

பக்கத்திலுள்ள பலகையை மேஜைக்கு மேல் பலகையாக உபயோகிக்க இதைக் குறைந்த அளவில் எத்தனை துண்டுகளாக வெட்டினால் சேதமேயில்லாமல் சதுரபலகையாக அமைக்கலாம்?





இந்தச் சட்டத்தில் மூன்று வெள்ளைக் காய்களும் மூன்று கறுப்புக் காய்களும் இருக்கின்றன. இப்பொழுது மூன்று கறுப்புக் காய்களும் 1, 2, 3 என்ற கட்டங்களுக்கு வரவேண்டும். வெள்ளைக் காய்கள் 4,5,6 கட்டங்களுக்கு வரும். 7 காலியாக இருக்கும். காய்கள் ஒவ்வொன்றும் ஒரே சமயத்தில் இரண்டு காய்கள் வரை தாண்டலாம். முன்னாலும் பின்னாலும் தாண்டலாம். பத்தே தடவைகளில் இந்தக் காய்கள் மேலே சொன்ன வரிசைக்கு வரமுடியுமா பாருங்கள்.

விடைகள்: 24-ஆம் பக்கம்

பாவம், வீராசாமி

ப. ரா.

பல வருஷங்கள் தவங்கிடந்த பின், பிள்ளையில்லாக் குறை தீர அருமையாகப் பிறந்த மகனுக்குப் பெற்றோர் வீராசாமி என்ற அழகான பெயரைச் சூட்டினர். ஆனால் இந்தப் பையன் வீரம் என்பதே என்ன என்றறியாமல் வளர்ந்து, முதல் தரமான பயந்தாங்கொள்ளியாகத் திகழப் போவது அந்தச் சமயத்தில் அவர்களுக்குத் தெரியவில்லை!

சிறுவனாயிருக்கும்போது வீராசாமி பூனையைக் கண்டு பயந்தான். நாய் குரைக்கும் சப்தம் கேட்டாலே நடுங்கினான். தப்பித் தவறி எப்போதாவது பேய் பிசாசுக் கதைகளைக் கேட்டு விட்டாலோ, அன்று இரவெல்லாம் அவனுக்குத் தூக்கம் வராது.

உரிய பருவத்தில் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டு அவன் பெற்றோர் கண்களை மூடினர். அப்போதிருந்து வீராசாமியின் மற்றப் பயங்களெல்லாம் ஓரளவு மறையத் தொடங்கி, ஒன்றே ஒன்றுமட்டும் தலை தூக்கி நின்றது. அதுதான் தன் மனைவி காளியம்மாவிடம் அவனுக்கிருந்த அச்சம்!

வீராசாமிக்குத்தான் பெயர்ப் பொருத்தம் சரியாக அமையவில்லையே தவிர, காளியம்மாவிற்குத் தன் பெயர் முற்றிலும் பொருந்தியிருந்தது. கோபம் வந்து விட்டால் அசல் காளி போலவே ஆவேசங் கொண்டு கணவனைப் பதறச் செய்துவிடுவாள். வீராசாமி அவள் கீறிய கோட்டைத் தாண்டுவதில்லை; 'பெட்டிப் பாம்பு' என்பார்களே, அப்படி அடங்கிக் கிடப்பான். உள்ளூர்ப் பாங்கியொன்றில் பியூன் உத்தியோகம் அவனுக்கு. முதல் தேதி சம்பளம் வாங்கியதும் அந்தப் பணத்தை அப்படியே முழுசாகக் கொண்டுவந்து இந்தப் பெண் தெய்வத்தினிடம் ஒப்படைத்து விடுவது, அவள் போடும் சோற்றைத் தின்றுவிட்டு விழுந்து கிடப்பது—இதுதான் அவன் வாழ்க்கை. 'வெற்றிலைப் பாக்கு வாங்கச் சில்லறை கொடு' என்று வாய் திறந்து அவளைக் கேட்கவும் அவனுக்குத் துணிவு கிடையாது. பாவம், வீராசாமி!

'பெண்டாட்டிக்குப் பயந்தவன்' என்று நண்பர்கள் அவனைக் கேலி செய்தது இயற்கை. அவர்களது மனைவிமார் அடக்க ஒடுக்கத்துடன் நடந்து, புருஷன் 'எள் என்னுமுன்னே எண்ணெ'யாகப் பணிவிடை செய்வதை வீராசாமி பார்த்தான்; பொருமைப் பட்டான். என்ன செய்யலாம்? அவன் தலையில் எழுதியிருந்தது அவ்வளவுதான்!



நினைக்க நினைக்க வீராசாமியின் நாவில் ஜலம் ஊறியது. வெகு நேரம் தயங்கினான், தத்தளித்தான். இறுதியில் எப்படியோ சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மனைவியைக் கேட்டே விட்டான்.

வந்து விட்டது கோபம் காளிக்கு. "என்னது? என்ன கேட்டே? பழையதும் தயிருமா? நீ சம்பாரிச்சுக் கிளிக்கிற காசிலே தயிரு வேறே வாங்கி உனக்குப் படைக்கணுமா?" என்று தொடங்கிப் பொரிந்து தள்ளிவிட்டாள்— ஓர் எரிமலை குமுறி வெடித்தாற் போல. மௌனமாகத் திட்டுக்களை வாங்கிக் கொண்டு உப்பில்லாத கூழைக் குடித்தான் வீராசாமி.

காரியாலயத்தை நோக்கி நடந்துகொண் டிருந்த அவன் மனம் எண்ணாத தெல்லாம் எண்ணி ஏங்கியது. "அவளுக்கு அத்தனை கோபம் வரும்படி நான் என்ன கேட்டேன்? பூரி-உருளைக் கிழங்கு, இட்லி-சாம்பார், தோசை-மிளகாய்ப் பொடி போன்ற உயர்ந்த வஸ்துக்களை விரும்பிக் கேட்கவில்லையே. கேவலம் பழையதும் தயிரும் கலந்து போடச் சொன்னேன். நாள் முழுவதும் செக்குமாடு போல் உழைத்துச் சம்பாத்தியம் செய்யும் எனக்கு ஒரு வேளையாவது விரும்பியதை, அதிலும் ஓர் அற்ப வஸ்துவைச் சாப்பிட அதிகாரமில்லையா? இது என்ன வாழ்க்கை!" என்றெல்லாம் பிடுங்கியது. அந்த மனோநிலையில் அவன் தெரு விபத்துக்கள் ஒன்றிலும் சிக்கிக் கொள்ளாது பத்திரமாகக் காரியாலயம் வந்து சேர்ந்ததே ஆச்சரியந்தான்.

காலை பத்து மணிக்கு அந்தப் பாங்கி வேலை தொடங்கும். முன் கூட்டியே வந்து சேர்ந்து அறைகளைப் பெருக்கி, மேஜை நாற்காலிகளைத் துடைத்துச் சுத்தமாக வைப்பது வீராசாமியின் முதல் கடமை. அதில் முனைந்தான்.

பணம் கொடுக்கல்-வாங்கல் செய்யும் 'கவுண்ட்டர்'களின் பித்தளைக் கம்பிகளை அவன் துடைத்துக்கொண் டிருந்தபோது அடியில் ஓர் வர்ணக் காகிதம் அசைவதைக் கண்டான். அக்கணமே அவன் கைகள் வேலையை நிறுத்திவிட்டன. இருதயமும் கூட ஒரு கணப்பொழுதிற்கு அடித்துக் கொள்வதை நிறுத்திவிட்டது.

வியப்பால் மலர்ந்த கண்களுடன் வீராசாமி அந்த நூறு ரூபாய் நோட்டைப் பார்த்தபடி நின்றான். யார் தவற விட்டதோ தெரியவில்லை. யாராயிருந்தாலென்ன? இனி அது அவனுடைய சொத்து!

மெல்லக் குனிந்து அதைப் பொறுக்கினான். சட்டைப்பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான். அந்த நிமிஷம் முதல் நூறு ரூபாய் நோட்டின் அற்புத சக்தி அவனை ஆட்கொண்டது. உடலில் ஒரு புதுப் பலம் ஊறிவிட்டது போன்ற உணர்ச்சி. உள்ளத்தில் எதையும், யாரையும் பொருட்படுத்தாத தைரியம்.

ஆபீஸ் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சிப்பந்திகள் ஒவ்வொருவராக வந்து சேரத் தொடங்கினர். எல்லோருமே வீராசாமியின் முகத்திலே வீசிய தனிக்களையைக் கவனித்தார்கள், ஆச்சரியப் பட்டார்கள். வழக்கமாக, 'டேய் வீராசாமி!' என்று அதிகாரமாக அவனை அழைத்து மிரட்டும் குமாஸ்தாக்கள்கூட இன்று சற்று விநயமாகவே நடந்து கொண்டனர்.

மானேஜருக்குக் காபி வாங்கி வரப் போகும் வழியில் ஒரு ஸலூன். அங்கிருந்த நிலைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டான் வீராசாமி. அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அத்தகைய மாற்றம். அவனது சீனுக்காரன் மீசைகூட அல்லவா தானே எழுந்து இருபுறமும் மேல்நோக்கி முறுக்கிக் கொண்டு நின்றது!

காலையில் பழையதும் தயிரும் பற்றி நடந்த விவகாரம் அவன் நினைவில் தோன்றி ஈட்டி போலக் குத்தியது. "ஓகோ! அப்படியா சேதி? ராத்திரி வீட்டிற்கு வந்ததும் உனக்குப் புத்தி கற்பிக்கிறேன், காளி!" என்று கறுவிக்கொண்டு வீராசாமி மேலே நடந்தான்.

வீராசாமி தட்டிலிருந்து எடுத்து விட்டெறிந்த கீரை மசியல் குறி தவருது பாய்ந்து சென்று காளியம்மாவின் முகத்தில் அப்பிக் கொண்டது. அவள் பதறிப் போனுள்.

''நீயும் ஒரு பொம்பிளேயா? கஷ்டப்பட்டு உளேச்சுச் சம்பாரிக்கிற புருசனுக்கு நல்ல சாப்பாடு போட உனக்கு மனசு வரலியே! மார்க்கெட்டிலே கத்திரிக்காய், வெண்டைக்காய் எல்லாம் எறைஞ்சு கிடக்குது. அதையெல்லாம் விட்டுப்போட்டுக் கீரை மசியல் செஞ்சு எனக்குப் படைக்க வெக்கமாயில்லே? வேறே ஒரு புருசனுயிருந்தா உன் மென்னியைத் திருகிப் போடுவான், தெரியுமா?..'' என்று தொடங்கிய வீராசாமி பல வருஷங்களாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளேயெல்லாம் ஒருங்கே கொட்டித் தீர்த்தான். அரை டஜன் இடிகள் சேர்ந்தாற் போல இடித்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அவன் குரல்.

இப்போது அவனிடம் வம்பு வைத்துக் கொள்வது அபாயம் என்று காளிக்குத் தெரிந்தது. அவள் வாயைத் திறக்கவில்லே. காலே வரையில் முதுகெலும்பே இல்லாதவன் போலிருந்த கணவன் திடீரென விசுவரூபம் எடுத்த விந்தை அவளுக்கும்தான் புரியவில்லே.

ஒருவழியாகச் சாப்பாட்டை முடித்துக் கைகழுவிய வீராசாமி கயிற்றுக் கட்டிலின் மீது ஜம்மென்று போய் அமர்ந்தான். ''ஏய்! அந்த வெற்றிலேப் பெட்டியை எடு'' என அவனது கட்டளே பிறந்தது.

இப்போதுதான் சற்றுத் தலேயைத் தூக்க முயன்ற காளியம்மை, ''அதிலே ரெண்டு வெத்திலேதான் இருக்குது. எனக்கு வேணும்'' என்ருள்.

வீராசாமியின் கண்கள் மீண்டும் சிவந்தன, உடலில் கொதிப் பேறியது – 'தனக்கில்லாத பொருளா இவளுக்கு?' என்ற நியாயமான கொதிப்பு.

''என்ன, கொடுக்கிருயா, இல்லேயா?'' என்று உறுமினுன். ''முடியாது'' என்று முறைத்தபடி வெற்றிலேப் பெட்டியைத் தாவி எடுத்துக் கொள்ள முயன்ருள் காளி. அந்த முயற்சி பலிக்கவில்லே. வீராசாமி வீறுப்புடன் குறுக்கே பாய்ந்து விட்டான். மின்னல் வேகம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்.

பெட்டி அவன் கையில் சிக்கியது. காளியம்மா உருட்டியடித்

துக்கொண்டு போய் அறையின் மூலையில் விழுந்தாள். அதோடு அவளைத் தைரியம் கைவிட்டது. உதைபட்ட நாய் வாலைப் பின்னங் கால்களுக்கிடையே மறைத்துக் கொண்டு நழுவுவது போல் மெல்ல எழுந்து சமையற்கட்டை நோக்கி நடந்தாள்.

ஜயக்கொடி நாட்டி விட்ட வீராசாமி கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து சம்பிரமமாகத் தாம்பூலம் தரித்துக் கொண்டான். 'இனி இந்த வீட்டில் சர்வாதிகாரி நானேதான்' என்ற பெருமையால் உப்பினான்.

அவனுக்கு ஆண்மையை அளித்து அற்புதங்கள் செய்த நூறு ரூபாய் நோட்டு சட்டைப்பையில் இன்னும் பத்திரமாக இருந்தது.

* * *

வீராசாமி முற்றிலும் புது மனிதனாகி விட்ட செய்தி எங்கும் பரவியது. 'இளைத்தவனைக் கண்டால் ஏறி மிதி' என்ற கொள்கையை அனுசரித்து முன்பெல்லாம் அவனை அலட்சியமாக நடத்தியும் ஏளனம் செய்தும் வந்தோர் இப்போது அவனுக்கு மதிப்புத் தந்து மரியாதையுடன் நடந்தனர். காளியம்மா அவன் வேண்டியதைத் தாமதியாது அளித்துக் குற்றேவல் புரிந்தாள். ஆபீஸில் அவனுக்குப் 'பிரமோஷ'னும் கிடைத்தது.

ஆனால் எந்த நிலைமையிலும் அந்த நூறுரூபாய் நோட்டை மாற்றிச் செலவு செய்ய வீராசாமிக்கு மனம் வரவில்லை. தன் உயிரினும் உயர்ந்ததாக எண்ணி அதைப் பாதுகாத்து வந்தான்.

'கணவனது திடீர் மாறுதலின் ரகசியம் என்ன, என்ன?' என்று யோசித்து மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தாள் காளியம்மா. அதிகாரம் செய்து, அடக்கியாண்டு பழகி விட்ட அவளுக்கு இப்போது இந்த வாழ்க்கை வேம்பாகக் கசந்தது. இழந்த உரிமையை மீண்டும் பெறுதல் எப்படி?

நள்ளிரவு நேரம். அவள் தூங்குகிறாளென்று நினைத்துக் கொண்டு மெல்ல எழுந்த வீராசாமி சமையலறைக்குள் சென்றான். அம்மியை நகர்த்தி அதனடியிலிருந்த மண் கலயத்தைத் தோண்டியெடுத்தான். அதில் அடக்கம் செய்யப்பட்டிருந்த நூறுரூபாய் நோட்டைத் தினம் ஒரு முறையாவது பார்த்தால்தான் அவனுக்குத் தூக்கம் வரும்.

இன்று காளியம்மாவும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்து உண்மையைக் கண்டு பிடித்து விட்டாள் என்று அவனுக்கு எப்படித் தெரியும், பாவம்!

* * *

பொழுது விடிந்து கொண்டிருந்தது. கோழிகளின் கூவலும் தெருவில் உருளும் வண்டிகளின் ஓசையும் இதர சப்தங்களும் வீராசாமியின் நித்திரையைக் கலைக்கவில்லை. இப்போதெல்லாம் காளி கொண்டு வந்து தரும் காபியைக் குடித்த பிறகுதான் அவன் படுக்கையை விட்டு எழுந்திருந்தான்.

இன்று காபியா வந்தது?

''இந்தா, மணி ஏழு அடிக்கப் போவுது. இன்னும் எருமை மாதிரி உறங்கிறியே..'' என்ற அதட்டல் கேட்டதும் அலறியடித்துக் கொண்டெழுந்தான். கையில் வெண்சாமரத்துடன் காளிதான் எதிரே நின்றாள்.

''கா......பி..'' என்று உளறி வைத்தான் வீராசாமி.

''காபியா? ஓட்டலிலே இருக்குது..உம். எளுந்திரு. ஒரு வாரமா என்னைப் போட்டுப் பம்பரமா ஆட்டி வைச்சேயில்லே? இனிமே நடக்காது உன் வித்தை'' என்றாள் காளி.

ஏதோ ஓர் அச்சம் வீராசாமியின் நெஞ்சைக் கௌவத் தொடங்கிற்று. மெல்ல எழுந்து சமையற்கட்டை நோக்கி நடந்தான். அங்கே அம்மியையே காணோம்!

ஒரே கணம்தான். ஆண்மையும் வீரமும் எத்தனை வேகமாக வந்து புகுந்தனவோ, அதே வேகத்தில் அவனைக் கைவிட்டு மறைந்து விட்டன. நிமிர்ந்த தலை குனிந்தது, மீசையின் முனைகளும் முன் போலவே பூமியை நோக்கி வளைந்தன. பணம் பறிபோனதோடு அவன் 'பழைய வீராசாமி' ஆனான்.

ஆயன் ஊதி வந்தால்!

மாலை அந்தி வேளை - ஊரின்
மாடு சாயும் சாலை
பாலன் எங்கள் கண்ணன் - இசை
பாடக் கேட்டு நிற்போம்!

பெண்கள் எல்லாம் கூடி - கண்ணன்
பாடும் திக்கைத் தேடி
கண்ணை மூடி நின்று - இசை
கேட்டு நிற்போம் ஒன்றி!

குழலின் இசையைக் கேட்டால் - உள்ளம்
குதித்து ஆடும் பாட்டால்
உழலும் துன்பம் ஓடும் - இன்ப
உவகை வந்தே கூடும்!

தவழும் சின்னத் தம்பி - தள்ளாத்
தடியை ஊன்றும் தாத்தா.
இவர்க ளோடு நாங்கள் - இன்னும்
எங்கள் ஊரில் உள்ள,

ஆடு, மாடு, கன்று - நடம்
ஆடும் மஞ்ஞை யோடு
பாடும் குயிலும் கூட - கண்ணன்
பண்ணில் இன்பம் நாட

ஆயன் ஊதி வந்தால் - ஊரே
அதனில் மூழ்கிப் போகும்
நேயக் கண்ணன் பேரே - எங்கள்
நினைப்பில் நிற்றல் ஆகும்!

—அமுதன் வேங்கடராமன்;

நீங்களும் நானும்

ஆர்வி

குழந்தை வேங்கடாசலம், புதுவயல்

கே: தென்னகத்திலே அதிகமாக விற்கும் தமிழ் பத்திரிகைகள் எவை?

ப: செய்தித்தாள்: தினத்தந்தி; வாரப் பத்திரிகை: ஆனந்த விகடன். மாதம் மும்முறை: குமுதம்; மாதப் பத்திரிகை; கலைமகள். மாதம் இருமுறை; கண்ணன் (இது சிறுவர் பத்திரிகை)

இரா. துரைராஜ், திருவிடவாசல்

கே: கண்ணனில் ஏன் அட்டைப் படக் கதை போடுவதில்லை?

ப: இதுவரை யாரும் அப்படி எழுதிக் கேட்காததே காரணம். படம் என்றால் அது தன்னைத் தானே விளக்குவதாக இருக்க வேண்டும். கதைக்குப் படம் போடுவது என்பது வேறு; படம் தானே ஒரு கதையைச் சித்திரிப்பதாக இருப்பது என்பது வேறு. அட்டைப் படக் கதைக்கு ஆதரவு அதிகம் இருந்தால் அப்படியே வெளியிடத் தடையில்லை.

ஜெ. ஜயராமன் பங்களூர்,
கே. சுந்தரமூர்த்தி, சூளை

கே: ஷெரிப் என்றால் என்ன பொருள்? அவருடைய வேலை என்ன?

ப: ஷெரிப் எள்றால் ஊரின் பிரமுகர் அல்லது தலைமைக்காரர் என்று பொருள், கிராமங்களில் நாட்டாண்மைக்காரர் என்று சொல்வது போல. பட்டணம் போன்ற பெரிய நகரங்களிலேயே இந்தப் பதவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஊருக்கு முக்கியமான காரியங்களை முதன்மையாக இருந்து நடத்துவதே ஷெரிப்பின் வேலை. ஆரம்பத்தில் ஷெரிப்புக்கு அதிகாரம் அதிகம் இருந்தது. ஆனால் இப்போது இது பெரிதும் அதிகாரமில்லாத கௌரவப் பதவியாகவே மாறிவிட்டது.

கே. ரவீந்திரன், மாரக்கம்பட்டி

கே: செயற்கைச் சந்திரன் மூலமாகச் சந்திரனுக்குப் போவது சாத்தியமா?

ப: இன்னும் சில வருஷங்களில் சந்திர மண்டல யாத்திரை செய்வது சாத்தியம் என்று அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். சந்திர மண்டலம் போய் வர, பத்து வருஷங்கள் பிடிக்குமாம்.

இரா. தமிழ் உழைஞன்.
கீழ்க்கோட்டை

கே: காற்று மண்டலம் பூமியைச் சுற்றி எத்தனை மைல் வரை வியாபித்திருக்கிறது?

ப: சுமார் இருநூற்றைம்பது மைல் வரையில் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். மீன்கள் ஜலசமுத்திரத்தில் வசிப்பது போல நாம் காற்றுச் சமுத்திரத்தில் உயிர் வாழ்கிறோம்.

உசைன் அகமது மதான், தென்காசி

கே: நீங்கள் யாரை விரும்புகிறீர்கள்? நண்பர்களையா அல்லது மிருகங்களையா?

ப: மிருக நண்பர்களை. ஏனெனில் மனித நண்பர்களைப் போல் அவை எப்போதும் பேசுவதேயில்லை.

தமிழ்நாடன், மேட்டுப்பாளையம்

கே: பணக்காரனாக விரும்புவது பேராசையாகுமா?

ப: ஒருகாலும் ஆகாது. பணக்காரனாக ஆனால்தானே வள்ளலாகவும் ஆகமுடியும்? வள்ளலாக இருப்பது பேராசையா?

கே: பேராசிரியர் மு. வ. வைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற முடியுமா?

ப: அவருடைய முதல் நாவலை முதலில் வேறு யாரும் துணிந்து போட முன்வரவில்லையாம். அவரே சொந்தமாக வெளியிடத் துணிய வேண்டியிருந்ததாம்.

ஆர். நாராயணன், மயிலாப்பூர்
கே: தமிழ் நாட்டின் நகைச் சுவைக் கவிஞர் யார்?
ப: உடுமலை நாராயண கவி

மதுலம், மதுரை
கே: பிர்லா என்பவர் யார்?
ப: சொந்த ஊரிலே பிழைக்க வழியில்லாமல் பாலை வனத்தைக் கடந்து வந்து, தொழில் செய்து, பாடு பட்டார் அவர் பாட்டனார். இன்று இந்தியாவிலேயே மிகப் பெரிய பணக்காரர்களாக விளங்கு கிறார்கள் பிர்லா சகோதரர்கள். காந்தியோடு எப்போதும் சுற்றி வந்தவர் (ஜி. டி. பிர்லா) கன சியாம்தாஸ் பிர்லா. இந்தியா வின் மிகப் பெரிய தொழிலதிபர் களில் ஒருவர்.

எஸ்.என். ராதாகிருஷ்ணன், கல்லை.
கே: பாம்புக்குப் பகலில் கண் தெரியுமா?
ப: தெரியும்.

உ. பி. கிருஷ்ணன், கோபி
கே: வாழும் விதம் என்ன?
ப: சேற்றில் முளைத்தாலும் செந்தாமரை மலர் போல் தேன் கசிய உயர்ந்து வாழவேண்டும்.

வே. ரங்கநாதன், புவனகிரி
கே: நீங்கள் குள்ள நரியைப் பார்த்திருக்கிறீர்களா?
ப: இல்லை; ஆனல் குள்ள நரி யைப் போன்ற சில அரசியல் வாதிகளைப் பார்த்திருக்கிறேன். குள்ள நரி மிகவும் தந்திரசாலி என்பது வெறும் கட்டுக் கதை யல்ல. அது மிகவும் துணிச்சலான விலங்கு. துப்பாக்கி வெடிக்குச் சிங்கம் கூட நடுங்கிவிடும். ஆனல் குள்ள நரி நடுங்காது. துப்பாக்கி வெடி தன்னைக் கொன்று விடும் என்பது அதற்குத் தெரியும். ஆயினும் அது தன்னம்பிக்கையை இழப்பதில்லை.

அ. போஜராஜன், புரசைவாக்கம்
கே: உலகத்தில் மிகவும் தூய் மையான இடம் எது?
ப: இமயத்தின் பனிச் சிகரம்.

எஸ். சுந்தர். உதகை
கே: விநோபா பாவேயின் சொந்த ஊர் எது?
ப: மகராஷ்டிரத்தில் கொலாபா ஜில்லாவில் உள்ள 'ககோடே என்ற கிராமம்.

எஸ். செல்லம், மதுரை
கே' குழந்தையின் இதயம், மறந்தவுடன் திடீரென்று எப்படி வேலை செய்கிறது?
ப: இருதயம் பிறந்தவுடன் தான் வேலை செய்கிறது என்று எண்ணுவது தப்பு. தாயின் கர்ப் பத்திலேயே அதன் இருதயம் வேலை செய்யத் தொடங்கி விடு கிறது.

கே.கே. அமீர் சாயபு,வாலிகண்டபுரம்
கே: நான் சினிமாவில் சேர ஆசைப்படுகிறேன், முடியுமா?
ப: நிச்சயம் முடியாது. ஏனென் ருல் நீ இடம் புரியாமல் வந்து கேட்கிருய்! எதை யாரிடம் கேட்பது என்று புரியாதவனை யார் சேர்த்துக் கொள்வார்கள்?

கி. ரா. சிதம்பர குமாரசாமி தென்காசி
கே: அமெரிக்கச் செயற்கைச் சந்திரனுக்கு என்ன பெயரிட் டிருக்கிருர்கள்?
ப: முன்பு ஆல்பா; இப்போது எக்ஸ்பிளோரர்.

பெ. கந்தசாமி, நாச்சியப்பட்டி
கே: உலகிலேயே பெரிய தீவு கிரீன்லந்தா, ஆஸ்திரேலியாவா?
ப: இரண்டையும் விட தென் துருவக் கண்டமான அன்டார்ட் டிகா பெரியது. ஆனல் ஆஸ்திரே லியாவையும் சரி, அன்டார்ட்டிகா வையும் சரி தீவு என்று சொல்வ தில்லை.

டி. எஸ். சேதுராமன், திருச்சி
கே: தபால் தலைகளை முதல் முதல் யார், எப்பொழுது அச்சிட்டு உபயோகித்தார்கள்?
ப: 1840 - இல் இங்கிலாந்தில் பென்னித் தபால் தலைகளை அச் சிட்டு வெளியிட்டார்கள்.

எஸ். சுமதி, சென்னை - 9
கே: இந்தியத் தபால் - தந்தி இலாகாவின் சிறப்பு என்ன?
ப: இந்தியத் தபால் தந்தி இலாகா தினம் 35 பாஷைத் தபால்களைக் கையாள்வதுதான்.

ஜான். தேவதாஸ், கொழும்பு - 13

கே: ஏசுநாதர் காலத்திலேயே இந்தியாவில் சர்ச்சு இருந்திருக்கிறதா?

ப: அப்படித்தான் சொல்கிறார்கள். ஸிரியன் கிறிஸ்தவ சர்ச்சு இந்தியாவில் சுமார் 2000 வருஷ காலமாக இருந்து வருகிறதாம்.

கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்

கே: பயத்தின் பிறப்பிடம் எது?

ப: அறியாமை.

எஸ். சுவாமிநாதன், கும்பகோணம்

கே: லண்டன் மா நகரைப் பற்றியும் அங்குள்ள தெருக்களின் அமைப்பைப்பற்றியும் அங்கு நடைபெறும் ஆட்சியைப்பற்றியும் கூறமுடியுமா?

ப: சரியான கேள்வி. ஏன் முடியாது? லண்டன் மா நகரம் அழகான நகரம்; அழகான தெருக்களின் அமைப்பு. அங்கு நடை பெறுவது அழகான ஆட்சி.

இரா. சீனிவாஸன், திருச்சி

கே: உலகத்தில் எவ்வளவு பேர் இன்று ஆங்கில மொழி பேசுகிறார்கள்?

ப: இன்று 26 கோடி மக்கள் ஆங்கிலமொழி பேசுகிறார்கள். ஆங்கிலமொழி அறிந்தவர்கள் கணக்கு இதில் சேரவில்லை.

எஸ். குகன், தென்காசி

கே: நீங்கள் விரும்புவது எதை? ஏன்?

ப: நான் விரும்புவது இலக்கியத்தை. ஏனெனில் மனித இனத்தைப்பற்றி மனிதன் தெரிந்து கொண்டதெல்லாம் இலக்கியமாக உருவெடுத்திருக்கிறது. அதனால் தான். ஓர் அறிஞன் கூறுவதைப் பார்: ''மனிதன் எப்படி இருந்தான் என்று கூறுவது சரித்திரம். என்ன செய்கிறான் என்பதைக் கூறுவது சட்டம்: அவன் என்னவாக இருக்கிறான் என்று கூறுவது உடல் நூல். எப்படி இருக்க வேண்டும் என்று கூறுவது நீதி. எப்படி இருக்கப் போகிறான் என்று கூறுவது தரிசன நூல்கள்.''

பொழுது போக்கு - விடை







1. இதே போல் வெட்டி வருவதை மீண்டும் வெட்டினால் சதுரமாக இணைக்கலாம்.

2. மூன்றே துண்டுகளாக வெட்டினால் போதும். ஆ, உ, ஊ என்கிற முக்கோணம் கிட்டதட்ட ஆ, இ, ஊ, ஈ என்கிற சதுரத்தில் கால் பங்கு. எனவே உ விலிருந்து ஆ. இ. என்கிற கோட்டின் சரி பாதியில் ஒரு கோடு போட்டுக்கொள்ள வேண்டும். அந்த முனையையும் ஈ யையும் இணைத்து விட்டால் இரண்டு முக்கோணம் கிடைக்கின்றன. அவற்றை வெட்டினால் அடுத்த படத்தில் உள்ளபடி சதுரவடிவாக்கிவிடலாம்.

3. 2 விருந்து 1; 5-2; 3-5; 6-4; 7-6; 4-7; 1-4; 3-1; 6-3; 7-6. மொத்தம் பத்துத் தடவைகள்.

கடலில் மரக்கலங்கள் வரிசையாக நிற்கின்றன. சிலர் படகுகளில் ஏறிச் செல்வதும் இறங்கி வருவதுமாக இருக்கின்றனர். கரையில் கடற்புலியும் கிழவனும் பேசிக்கொண்டு நிற்கிறார்கள்.
கடற் போரிலே நன்மை யாராலும் வெல்ல முடியாது!
படைவீரர்கள்?
கரையிலே படை வீரர்கள் அணி வகுத்து நிற்கிறார்கள். கடற்புலியும் கிழவனும் பேசியவாறு நடந்து கொண்டே பார்வையிடுகிறார்கள்.
தீவிலுள்ள ஒவ்வொருவனும் படையில் சேர்க்கப் பட்டிருக்கிறான்!
அப்போது அவர்களுக்குப் பின்புற மிருந்து ஓர் அம்பு சீறிக்கொண்டு வருகிறது.
ஙொய்!
கடற்புலி திரும்பிப் பார்ப்பதற்குள் முன்னால் இருக்கும் ஒரு படை வீரன் குறுக்கே பாய்ந்து தடுக்க, அம்பு அவன் மார்பில் பாய் கிறது.
ஆ!!

211812

கீழே விழுந்த வீரன் மார்பிலிருந்து கடற்புலி அம்பைப் பிடுங்குகிறன்.
எங்கிருந்து தொடுத்த அம்பு இது?
யாரோ அருகில் தான் இருக்க வேண்டும். உம்; போய்ப்பிடியுங்கள்
முன்னால் நின்ற நாலைந்து வீரர்கள் அம்பு வந்த திசையில் ஓடுகிறார்கள்.
தேடப்போன வீரர்கள் ஒருவரையும் காணாது திகைத்து நிற்கும் போது . . . .
யார் என்று தெரிந்து விட்டது! கிழப்பம் வேண்டாம்! அணி வகுப்பு கலையலாம்!
படை வீரர்கள் கிழவன் கட்டளைப்படி பிரிந்து சென்ற பின் . .
அதோ அந்த மரக்கிளையில்! கிளைகளாலும் இலைகளாலும் மறைத்துக் கொண்டு!

(தொடரும்)

பரிசுபெற்ற தொடர்கதை:

குழம்பிய மனத்துடன் இன்ஸ்பெக்டர் பட்டாபி ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். அப்பொழுது இரவு 9½ மணி ஆகியிருந்தது. அவருடைய நோக்கமறிந்து கான்ஸ்டபிள்களும் ஒன்றுமே பேசவில்லை. ''சரக்'' ''புரக்'' என்று பூட்ஸ் சத்தம் தான் எழுந்து அமைதியைக் குலைத்தது. அவர் மேஜைக்கு அருகில் வந்ததும், 'ஹெட்கான்ஸ்டபிள் 306..' என்பவனை அழைத்தார்.

''சார்!....ஒரு விஷயம். நம்ம கான்ஸ்டபிள் விநாயகம் வந்திருக்கிறான்..'' என்றான் 306.

''லீவிலிருந்த விநாயகமா?.. எங்கே வந்தான்?'' அதற்குள் விநாயகமே எதிரில் வந்தான் அழுது வடிந்துகொண்டு.

''ஏண்டா! 'டிரஸ்'ஸில்லாமெ ஏன் வந்தே?''

''அதாங்க! நம்ம வீட்டிலே எவனோ ஒரு திருட்டுப்பய என் பெண்சாதியை ஏமாத்தி எல்லா 'டிரஸ்'ஸையும் கொண்டு போயிட்டாங்க.''

பட்டாபிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதே சமயம் அன்று மாலை ஸம்பத்துக்குப் போன்செய்த போது அவன் சொன்ன செய்தி ஞாபகத்துக்கு வந்தது.

பட்டாபி பதில் சொல்லவில்லை. உச்சி முகட்டைப் பார்த்துத்தலையை ஆட்டி, ''ஓகோ! சரிதான்! சரிதான்'' என்றார் மெள்ள.

''விநாயகம், உன் பெண்சாதியை ஏமாற்றிய அந்த ஆளுடைய அடையாளம் சொல்ல முடியுமா?''

''அது தெரியாதுங்க..''

''விநாயகம்! உன்னை நான் நம்ப முடியாது. நாளைக்கு நீ எப்படியும் 'டிரஸ்'ஸோடு வந்துதான் ஆகவேண்டும். அதை நீ எங்கிருந்து கொண்டு வருவாயோ. எனக்குத் தெரியாது.'' கடுமை தொனித்தது அவர் குரலில்.

விநாயகம் பேச வாயெடுத்தான்.

''தெரியும் எனக்கு...போ;.. சொன்னால் சொன்னதுதான்...நம்பர் 288 தானே!..''

''ஆமாங்க..அதாவது..'' என்றான் விநாயகம். இன்ஸ்பெக்டர் அவன் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பக்கத்திலிருந்த போனை எடுத்து அழைத்தார்.

''ஹலோ! ஸம்பத்!..ஸம்பத்!''

''இல்லையே!'' என்ற பதில் வந்தது.

''எங்கே அவன்?''

''எட்டு மணிக்கு மோட்டார் சைக்கிளில் போனார்கள் இருவரும்.

''மணி பத்தாகிறதே, இன்னுமா வரவில்லை?''

'டக்' என்று பட்டாபி டெலிபோனை வைத்தார். ''ஏய் 306! ஸ்டேஷனை கவனித்துக்கொள்.

வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார். அவருடைய சைக்கிள் வீட்டை நோக்கிப் பறந்தது.

* * *

பஞ்சநாத முதலியாருக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமில்லை. பணம் போனதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. ஆனால் இந்த மாதிரி தொடர்ந்து நடக்காமல் இருக்கவேண்டுமே என்றுதான் கவலைப் பட்டார். அன்று இரவு எல்லா வேலைக்காரர்களுக்கும் இந்த விஷயத்தை வெளியில் ஒருவருக்கும் சொல்லக்கூடாது என்று எச்சரித்தார். கூர்க்காவும் தலையை ஆட்டிப் போனான். மணி பத்தாகி விட்டது. விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையிலேயே உட்கார்ந்திருந்தார். எங்கும் அமைதி! நிச்சப்தம்! தூக்கம் வர மறுத்தது அவருக்கு. அரை மணி நேரம் யோசனை செய்துகொண்டிருந்தார். அவருக்கு எப்படியும் ஒரு நப்பாசை. அன்றிரவு அந்தத் திருடனைக் கண்டு பிடித்துவிட வேண்டுமென்று. தோட்டக்காரனின் தனி வீடு அவர் இருக்கும் அறையிலிருந்து நன்றாகத் தெரிந்தது. அந்தக் கூர்க்காவின் மேலும் அவருக்குச் சந்தேகம்தான். பார்க்கப்போனால், இப்பொழுது பொதுவாக எல்லா வேலைக்காரர்களிடமும் சந்தேகந்தான். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற கதையாகத் தோன்றுகிறதோ என்றுகூடத் தோன்றியது

அவருக்கு. மேல் மாடியில் போய் உலாவிவிட்டு வரலாமா என்று நினைத்தார். படுக்கையை விட்டு எழுந்தார். அவர் போவதற்குள் பார்வை தற்செயலாகப் பங்களா வின் வாசல்பக்கம் சென்றது. ஒரு கணம் அவர் திகைத்துப்போய் விட்டார். அந்த மங்கலான வெளிச்சத்தில் பங்களா வாசலில் நின்றுகொண் டிருந்த கூர்க்கா விடம் ஒரு சிறு பையன் ஏதோ ஒன்றைக் கொடுத்துக் கொண் டிருந்தான். 'அது என்ன? அந்தக் கூர்க்கா ஏன் சுற்றி முற்றிப் பார்க் கிறான்? அதை வாங்கிப் பரபரப் புடன் பைக்குள் வைத்துக் கொள் கிறான்?..ஆகா!..கூர்க்கா ஒரு மோசக்காரன்!..'

* * *

ஸப் இன்ஸ்பெக்டர் பட்டாபி எவ்வளவு வேகமாக வீட்டுக்கு வரமுடியுமோ அவ்வளவு வேகமாக வந்து சேர்ந்தார். உள்ளே வந்ததும் வராததுமாக ஸம்பத்தைப் பற்றித்தான் விசாரித்தார். மணி பதினொன்று ஆகியும் அவன் வராதது அவருக்குக் கவலையாக இருந்தது. அவன் போயிருக்கும் இடம் எதுவாக இருக்கும் என்று அவரால் ஊகிக்கமுடியவில்லை. எங்கேயானும் அவன் மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்றுதான் கவலை. ஆனால் ஸம்பத் அப்படி அசட்டுத்தனமாக மாட்டிக் கொள்வதற்கு அவ்வளவு முட்டாளல்ல. நல்ல முன் யோசனைக்காரன்தான். மாட்டிக் கொண்டாலும் தப்பிக்க வழி தெரியும். அதோடு அவன் நண்பன் ஸ்ரீதரன் வேறு வந்திருக்கிறானே!....பார்க்கலாம்!...மணி பன்னிரெண்டை நெருங்கிக்கொண்



''டேய்! பரீட்சையில் உன்னை ஹிந்தியிலே உங்கப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதச் சொன்னேனே, ஏண்டா எழுதலை?''

''நான் எழுதி என்ன சார் பிரயோஜனம்? எங்கப்பாவுக்குத்தான் ஹிந்தி தெரியாதே.''

—மாலா.

டிருந்தது. நேரம் ஆக ஆக, பட்டாபிக்குக் கவலைதான் அதிகரித்தது. கூடத்தில் அங்கு மிங்குமாக உலாவினார். டெலிபோன் மணி கண கண வென்று ஒலித்தது. இந்த நேரத்தில் யார் கூப்பிடுகிறார்கள்? டெலிபோனைக் கையிலெடுத்தார்.

''ஹலோ! யாரது?..பட்டாபி பேசறேன்.''

''ஸப் இன்ஸ்பெக்டர்தானே?'' என்ற குரல் வந்தது.

''ஆமாம்! என்ன?''

''திருடனுக்கு உளவு சொல்லிக் கொடுப்பவன் யார் என்று கண்டு பிடித்துவிட்டேன், ஸார். அது..''

அதற்கு மேல் கேட்கவில்லை. ''கொர்..கொர்'' என்று சப்தம் கேட்டது. அவ்வளவுதான். ஒன்றுமே கேட்கவில்லை.

பட்டாபி, ''ஹலோ! ஹலோ!'' என்று கூப்பிட்டுப் பார்த்தார்.. டெலிபோன் கம்பி அறுந்துவிட்டதா? அல்லது டேலிபோனில் பேசுபவரை யாரேனும் பலவந்தமாகத் தடுத்துவிட்டார்களா? யார் போன் செய்தது? அதைக் கேட்கவில்லையே!.. முதலியாராகத்தான் இருக்கும்..ஸ்டேஷனுக்கு போன் செய்து கேட்டார். 306தான் பதில் சொன்னான்.

''டெலிபோன் ஏதாவது வந்ததா சற்றுமுன்னால்?'' என்று கேட்டார் பட்டாபி.

''ஒண்ணும் இல்லீங்க..நம்ம விநாயகம்தான் ரொம்ப அழுவறான். சொல்லி அனுப்பிச்சேன் திருவல்லிக்கேணிக்குப் போடான்னு. அந்த ஆள்தான் டிரஸ்ஸைக் கொண்டுபோயிருப்பான்னு தோணுது, ஸார்!''

''எந்த ஆள்?''

''நீங்க அன்று காட்டல்லே கடைவீதிலே, கறுப்புக் கண்ணாடி?''

''அப்ப..விநாயகம் அங்கேயிருந்து போயிட்டானா?''

''போயி வெகுநேரம் ஆச்சுங்களே!''

''அட! அவன் போய் என்ன கிழிக்கப் போறான்?''

''பாவமுங்க! அவன் பேரிலே 'மிஷ்டேக்' இல்லே.''

''அது சரி 306 - எனக்கும் தெரியும். சும்மா மிரட்டினேன். அவனும் போய் 'ட்ரை' பண்ணட்டுமேன்னு. அதோட அந்த இரும்புப் பெட்டியும் போயிடுச்சல்ல...அதையும் கொண்டு வரட்டுமே..அப்புறம் நம்ப பையன் திருவல்லிக்கேணிதான் போயிருக்கான், இன்னும் வரல்லே..''

''இன்னுமாங்க...அடடே!'' டெலிபோனை 'டக்' என்று வைத்தார் பட்டாபி. ஒரு மணிவரையில் அங்கேயும் இங்கேயும் உலாவினார். தூக்கம் வரவேயில்லை. ஒன்றரை மணி ஆகிக்கொண்டிருந்தது. வெகு தூரத்தில் மோட்டார் சைக்கிளின் சத்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. 'ஸம்பத் வருகிறானா?..' மோட்டார் சைக்கிள் அவர் வீட்டுக் கேட்டைத் தாண்டி உள்ளே வந்துகொண்டிருந்தது.

(தொடரும்)

காரைக்கால் அம்மையார்

கிங்கரன்

சோழநாட்டில் காரைக்கால் ஒரு துறைமுகப்பட்டினம். அங்கே தனதத்தன் என்னும் வணிகன் அறநெறியோடு வியாபாரம் செய்துவந்தான். அவனுக்குத் திருமகள் போல ஒரு பெண் பிறந்தாள். அவளுக்குப் புனிதவதி என்று பெயரிட்டார்கள். அவள் சிறுவயதிலிருந்தே சிவபிரானிடத்து அன்புடன் ஈடுபட்டு வந்தாள். பருவம் அடைந்ததும் அவளை நாகப்பட்டினத்தில் பெரும் புகழுடன் விளங்கிவந்த நிதிபதி என்னும் வணிகனின் மகனான பரமதத்தனுக்கு மணம் செய்வித்தான். மணமக்களுக்குக் காரைக்காலிலேயே ஓர் அழகிய மாளிகை அமைத்துத் தந்தான். புனிதவதி தன் கணவன் மனங்கோணாமல் நடந்துவந்தாள். தன் மாளிகைக்கு வரும் சிவனடியார்களுக்கு அறுசுவை உணவும் உடையும் பிறவும் தந்து உபசரித்தாள். இல்லறம் இனிது நடந்து வந்தது. ஒரு நாள் பரமதத்தனிடம் தொழில் நிமித்தம் வந்த ஒருவர் அவனிடம் இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தார். பரமதத்தன் அவற்றை வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

அப்போது பசி மிகுந்த சிவனடியார் ஒருவர் பரமதத்தனின் இல்லத்தில் புகுந்தார். புனிதவதி அவரை முகமலர்ந்து வரவேற்று அன்போடு அமுதிட்டாள். அத்துடன் கணவன் அனுப்பிய மாங்கனி ஒன்றையும் அவருக்கு அளித்தார். அடியார் வயிறார அமுதுண்டு வாழ்த்திச் சென்றார்.

பிறகு பரமதத்தன் வீட்டிற்கு வந்து உணவருந்தினான். புனிதவதி எஞ்சியிருந்த மாங்கனியைக் கணவனுக்குப் படைத்தாள். அது மிகவும் ருசியாக இருந்ததால், மற்றொன்றையும் கொண்டுவரும்படி பரமதத்தன் கேட்டான். புனிதவதி மனம் தளர்ந்தாள். சிவபிரானை மனத்தில் எண்ணினாள். என்ன விந்தை! ஈசனுடைய அருளினால் புனிதவதியின் கையில் ஒரு மாங்கனி வந்து விழுந்தது. அதனை அவள் மகிழ்ச்சியோடு கொண்டு வந்து ஆசையோடு கேட்ட கணவனுக்கு அளித்தாள். அதன் சுவை அமுதத்





''டேய் மணி, இவன் என்னை அடிச்சுடுவானும் இல்லே! பெரிய கொக்கு - பாரு, இவரு....!''

தினும் மேம்பட்டு விளங்குவதை உணர்ந்த பரமதத்தன், ''இது ஏது? நான் அனுப்பிய கனியா? இது எப்படி வந்தது?'' என்று மனைவியைக் கேட்டான். புனிதவதி உண்மையைக் கூறிவிட்டாள். கணவன் வியப்படைந்தான். ''அப்படியா? எங்கே, இன்னொரு கனியை வரவழை. பார்க்கலாம்'' என்று கூறினான். புனிதவதி முன்போலவே இறைவனை வேண்டினாள். இப்பொழுதும் இறைவன் அருளால் மற்றொரு கனி கையிலே வந்து விழுந்தது. பரமதத்தன் அதனைக் கையில் வாங்கியதும் அது திடீரென்று மறைந்தது. அந்த அற்புதத்தைக் கண்ட பரமதத்தன், 'புனிதவதி ஒரு தெய்வப்பிறவி' என எண்ணினான். அவளுடன் வாழ அஞ்சி அயல்நாட்டில் வாணிபம் செய்வதற்குச் செல்பவனைப் போல மரக்கலத்தில் ஏறி, பாண்டிய நாட்டுக்கு வந்தான். வாணிபத்தின் மூலம் அங்கே ஏராளமான பொருள் சேர்த்தான். பிறகு அங்கேயே ஒரு வணிகனின் பெண்ணைச் சிறப்புடன் மணம் செய்துகொண்டு தங்கி விட்டான். நாளடைவில் அவர்களுக்கு ஒரு பெண் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மூத்த மனைவியின் நினைவாகப் புனிதவதி என்று பெயரிட்டான்.

பரமதத்தன் பாண்டிய நாட்டில் இருப்பது தெரிந்து, உறவினர்கள் புனிதவதியை அழைத்துக்கொண்டு அங்கே சென்றனர். அவர்களது வருகையை அறிந்த பரமதத்தன் தன் இளைய மனைவியோடும் பெண்ணோடும் எதிர்கொண்டு சென்று புனிதவதியை வணங்கி நின்றான். அதைக் கண்ணுற்ற உறவினர், ''உன் மனைவியை நீ வணங்குவது ஏன்?'' என்று கேட்டார்கள். பரமதத்தன் ''இவள் மானிடப் பிறவியல்ல. நான் வணங்கும் தெய்வமேயாகும். அதை நான் அறிந்தே என் பெண்ணிற்கு இவள் பெயரிட்டுள்ளேன்'' என்று கூறினான்.

புனிதவதி தன் கணவனது மனத்தை உணர்ந்து சிவபிரானிடம், ''உம்முடைய பூதகணங்கள் போற்றும் பேய்வடிவை எனக்குத் தந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். உடனே ஈசனுடைய அருளினால் அழகிய உருவம் நீங்கி எலும்புக் கூடான பேய்வடிவம் பெற்றாள். ஈசன், மூர்த்தி உருவாய்க் குடிகொண்டிருக்கும் க்ஷேத்திரங்களைத் தரிசிக்கப் புறப்பட்டாள். கிரமமாய்ப் பல்வேறு ஸ்தலங்களைத் தரிசித்து, பிறகு சிவபிரானை நேரில் காண கயிலைமலையை அடைந்தாள். 'காலினால் நடந்து செல்வது தகாது' என்று எண்ணி, தலையினால் நடந்து சென்றாள். இதைக் கண்ணுற்ற சிவபெருமான் எதிரே தோன்றி, 'அம்மையே' என்று அழைத்தார். புனிதவதி, 'அப்பா' என்று அலறி ஈசனுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். ''ஐயனே, தங்களிடத்தில் எக்காலத்திலும் மாறாத அன்பு வேண்டும். இனி உலகில் பிறவாமலிருக்க வேண்டும். பிறந்தாலும் உம்மை மறவாமலிருக்க வேண்டும். மேலும் தாங்கள் ஆடுகின்றபோது நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உமது திருவடியின் கீழ் இருத்தல் வேண்டும்'' என்று வேண்டினாள். சிவபிரான், ''அப்படியே ஆகட்டும்'' என்று கூறி, தென் திசையிலுள்ள திருவாலங்காட்டிற்குப் புனிதவதியாரை வரச்செய்து அங்கே தம் நடனத்தைத் தரிசிக்கச் செய்தருளினார்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

ஸ்ரீரங்கம்
- உபதலைவர்: அ. வீரவாசகன்
- செயலாளர்: ஆர். தியாகராஜன்
- பொருளாளர்: திருநாவுக்கரசு
- ஆலோசகர்கள்: திரு. சக்திசரணன்
- (பள்ளி ஆசிரியர்) திரு. என். ஆர். நரசிம்மன்

பதினைந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாதம் இருமுறை 'யுக்தி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப் படுகிறது. அ. ஸ்ரீநிவாசன் (நிர்வாகி) 63, மேட்டுத் தெரு, கீழவாசல், ஸ்ரீரங்கம் என்ற விலாசத்துக்கு எழுத்தோவியங்களை அனுப்பலாம்.

தாம்பரம் (கிழக்கு)
- உபதலைவர்: ஆர். ரேவதி.
- பொருளாளர்: ஆர். ஸ்ரீதரன்
- காரியதரிசி: எஸ். பரமேசுவரன்

செயற்குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. வாசகசாலையும் 'தீபச்சுடர்' என்ற பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விலாசம்: ஆர். ஸ்ரீதரன், 4 போரூர் தெரு, தாம்பரம்.

பேனா நண்பர்கள்

1. ஆர். ராமசுவாமி, C/o ஆர். ராஜகோபாலன் பி, எ; 16, யசோதா பவன், 2, பம்பாய் ரோடு, பூனா-5.

2. என். நாகராஜன், s/o கே. எஸ். என். ஐயர், 307, ராஸ்தா பேட், பூனா-2.

3. ஸி. எம். ராஜேந்திரன், c/o ஸி, சின்னசாமி, 130/4, ரேஞ்சு ஹில்ஸ், கர்க்கி, பூனா-3.

4. எ. கே. சபாபதி, 7, ராகவையா ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

5. என். கிருஷ்ணமூர்த்தி, 18-B, வன்னியர் தெரு, சூளைமேடு, கோடம்பாக்கம், சென்னை-24.

6. எஸ். ஜி. ரகுநாதன், 46, செட்டித்தெரு, திருப்பத்தூர், (வ. ஆ)

7. எம். அமீர்சுல்தான், 170, மணக்கால் வீதி, சிறுதையூர், (வழி) லால்குடி, திருச்சி ஜில்லா.

8. ஆர். நாராயணசாமி, 29, பெருமாள் கோயில் மேற்குத் தெரு, கோட்டை, ஈரோடு.

9. உ. உத்தண்டராமன், s/o உத்தண்ட தேவர், 206/4 தனுஷ் கோடியாபுரம், பிள்ளையார் கோயில் தெரு, கோயில்பட்டி.

10. பெ. ரவீந்திரன், 28. சுலோசன நாடார் தெரு, விருதுநகர்.

11. எழிலன், இறுதிப்படிவம், இரண்டாம் பிரிவு, மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, மதுரை.

12. கே. வேங்கடாசலம், 'கோகுலம்' மேலத்தெரு, கிருஷ்ணன் கோயில், நாகர்கோயில், குமரி ஜில்லா.

13. எஸ். எ. கேசவன், கே. கழுகாசலபுரம், குறுமலை போஸ்டு, (வழி) கடம்பூர் S. Rly.

14. எம். எஸ். ராஜன், 9/10 லேக் ரோடு, கட்டுக்கெல்லை, கண்டி, இலங்கை.

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. No. M. 5542

கண்ணன் வெளியீடுகள்

தங்க மாம்பழம் - 'ராஜி' ரூ. 2·00

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்பதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

சைனா சூ-சூ! - ஆர்வி ரூ. 1.50

பிளாட்பாரத்திலே பத்திரிகைகள் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனா சூ-சூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் ரூ. 1·00

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி ந. பைசா 40

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்கு கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.